விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 22 செவ்வாய்க்கிழமை (08.10.2002) தொலைபேசி- 2223378 ஒலி 293

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

கைதிகளைப் பார்வையிட

## அமைச்சர் மிலிந்த மொறஹொட களுத்துறைக்குச் செல்வார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நேற்றிரவு அவசர அவசரமாக கூடி அமைச்சர் மகேஸ்வரனால் வழங்கப்பட்ட களுத்துறைச் சிறைக் கைதிகளின் கடிதம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

உண்ணாவிரதிகளின் கடிதத்தை நன்கு பரிசீலித்த ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அமைச்சர் மிலிந்த மொறஹொடவை களுத்துறைக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் அமைச்சர் மிலிந்த மொறஹொடவை இன்று களுத்துறைக்கு அனுப்பிக் கைதிகள் தொடர்பான சுமூகமான முடிவுக்கு வர முயற்சிப்பதாக அமைச்சர் மகேஸ்வரனிடம் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யோசப் பரராஜ

(10ம் பக்கம் பார்க்க)

## அரசு 2 புலிகளை விட்டால் புலிகள் 6 பரையினரை விடுவிப்பர்

கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரோண்ட் பியூறு ஹெவடே அரசாங்கத்தின் சமாதான செயலகத் தலைவர் பேர்ணாட் குணதிலகவை நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

திருகோணமலையில் விடுதலைப புலிகளினாலும், இலங்கை இராணுவத்தினாலும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவிப்பது தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்செல்வனுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் சமாதான செயலகத் தலைவர் பேர்ணாட் குணதிகவைச் சந்தித்து பேசியுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளை விடுவிப்பதற்குப்

(10ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் தூதுவர்கள் நியமனம் தமிழர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் டிரோன பெர்னான்டோவின் சிபார்சின் பேரில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவினால் நியமனம் செய்யப்பட்டுள்ள 20 வெளி நாட்டுத் தூதுவர்களில் ஒரே ஒரு தமிழர் இடம் பெற்றுள்ளார்.

முஸ்லிம் சமூகத்தைச்சேர்ந்த 5 பேரும் சிங்களவர்கள் 14 பேரும வெளி நாட்டுத் தூதுவர்களாக நியமனம் பெற்றுளார்கள்.

தூதுவர்களாக நியமனம் பெற்றவர்களின் பெயர்ப்பட்டியல வெளி நாடுகளுக்கு அனுப்பி வைக்கப பட்டிருப்தாகவும் அவர்களில் தெரிவு செய்யப்படுபவர்கள் அந்தந்த நாடுகளின் தூதுவர்களாக நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிககப்படுகிறது. (ம)

## பிரிட்டன் திருப்பி அனுப்பியது

(துன்னாலை)

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 17 பேரை, பிரிட்டன் அரசாங்கம் அவர்களின் அகதி அந்தஸ்து கோரிக்...

இவர்களில் கரவெட்டி மேற்கு மத்தொனியைச் சேர்ந்த க.நேசராஜா இது குறித்து தகவல் தருகையில்:-

களுத்துறைக் கைதிகளின் நெஞ்சுருக்கும் கடிதம்

# விடுதலை கிடைக்காவிடின்.
# தியாகச் சாவுதான் முடிவு?

## அமைச்சர் மகேஸ்வரன் ஊடாக பிரதமருக்குக் கைதிகள் கடிதம்

(களுத்துறையில் இருந்து அன்ரனி ஜீவா)

**நீண்டகாலமாக சிறைகளில் வாடும் எம்மை அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யத் தவறினால் நாம் சிறைக் கம்பிகளுக்குள் தியாகச்சாவைச் சந்திப்போம்.**

**எமது சாவு நாட்டின் சமாதானத்திற்கு குந்தகத்தை ஏற்படுத்தக் கூடாது. இந்த உண்ணாவிரதத்தின் மூலம் நாம் தியாகச்சாவை சந்திக்க நேர்ந்தால் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சியைக் கைவிடாது தொடர வேண்டும். இவ்வாறு களுத்துறை சிறைச்சாலையில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள தமிழ் கைதிகள் நெஞ்சை உருக்கும் கடிதம் ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.**

களுத்துறைச் சிறைச்சாலையில் இன்று எட்டாவது நாளாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளை இந்து காலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், காணி அமைச்சர் ராஜிதசேனாரட்ண சகிதம் சென்று பார்வையிட்டார்.

உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளைக் பார்வயிட்ட அமைச்சர் தி.மகேஸ்வரன் உண்ணாவிரதத்தை கைவிடுமாறும், விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பல தடைவைகள் எடுத்துக் கூறிய போதும் உண்ணாவிரதிகள் உண்ணாவிரதத்தை கைவிட மறுத்துள்ளனர்.அமைச்சர் மகேஸ்வரன் நேற்று நண்பகல் முதல் மாலை வரை உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு வற்புறுத்திய போதும் கைதிகள் தாம் உண்ணா விரதத்தைக் கைவிடப் போவதில்லை எனத் திடமாகக் கூறினர்.

இதனை அடுத்து உண்ணாவிரதம் இருக்கும் கைதிகள் தமது நிலை குறித்து அமைச்சர் மகேஸ்வரன் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு உள்ளத்தை உருககும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்கள், அக் கடிதத்திலேயே கைதிகள் தமது நிலைப்பாட்டை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

"விடுதலை இன்றேல் உயிர் துறப்போம்" என்னும் தலைப்பில் அமைச்சர் மகேஸ்வரன் ஊடாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

, சமாதான சூழ்நிலையில் தண்டனை பெற்று மற்றும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சகல தமிழ் அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பில் எந்தவொரு

(10ம் பக்கம் பார்க்க)

குடாநாட்டுப் பாடசாலைகள், திணைக்களங்கள் முன்பாக

## உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக இன்று மறியல் போராட்டம்

# வெளிநாட்டுத் தூதுவர்கள் நியமனம் தமிழர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் டிரோன பெர்னான்டோவின் சிபார்சின் பேரில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா வினால் நியமனம் செய்யப்பட்டுள்ள 20 வெளி நாட்டுத் தூதுவர்களில் ஒரே ஒரு தமிழர் இடம் பெற்றுள் ளார்.

முஸ்லிம் சமூகத்தைச்சேர்ந்த 5 பேரும் சிங்களவர்கள் 14 பேரும வெளி நாட்டுத் தூதுவர்களாக நிய மனம் பெற்றுளார்கள்..

தூதுவர்களாக நியமனம் பெற றவர்களின் பெயர்ப்பட்டியல வெளி நாடுகளுக்கு அனுப்பி வைக்கப பட்டிருப்தாகவும் அவர்களில் தெரிவு செய்யப்படுபவர்கள் அந்தந்த நாடு களின் தூதுவர்களாக நியமிக் கப்படுவார்கள் என்றும் தெரிவிககப்ப டுகிறது. (ம)

அரசியல் கைதிகளை இந்து காலா சார அமைச்சர் தி.மகேஸ்வரன், காணி அமைச்சர் ராஜிதசேனாரட்ண சகிதம் சென்று பார்வையிட்டார்.

உண்ணாவிரதம் இருக்கும் கைதி களைக் பார்வயைிட்ட அமைச்சர் தி.மகேஸ்வரன் உண்ணாவிர தத்தை கைவிடுமாறும், விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் பல தடைவைகள் எடுத்துக் கூறிய போதும் உண்ணா விரதிகள் உண்ணாவிரதத்தை தத்தை முடிவுக்கு கொண்டு வரு மாறு வற்புறுத்திய போதும் கைதி கள் தாம் உண்ணா விரதத்தைக் கைவிடப் போவதில்லை எனத் திட மாகக் கூறினர்.

இதனை அடுத்து உண்ணாவி ரதம் இருக்கும் கைதிகள் தமது நிலை குறித்து அமைச்சர் மகேஸ் வரன் மூலம் பிரதமர் ரணில் விக் கிரமசிங்காவிற்கு உள்ளத்தை உருக கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத் துள்ளார்கள். அக் கடிதத்திலேயே துறப்போம்" என்னும் தலைப்பில் அமைச்சர் மகேஸ்வரன் ஊடாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

, சமாதான சூழ்நிலையில் தண் டனை பெற்று மற்றும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சகல தமிழ் அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பில் எந்தவொரு

(10ம் பக்கம் பார்க்க)

# பிரிட்டன் திருப்பி அனுப்பியது

(துன்னாலை)

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 17 பேரை, பிரிட்டன் அரசாங்கம் அவர் களின் அகதி அந்தஸ்து கோரிக் கையை நிராகரித்து, நேற்று முன்தி னம் இலங்கைக்கு திருப்பி அனுப் பியுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

இவர்களில் கரவெட்டி மேற்கு மத்தொனியைச் சேர்ந்த க.நேச ராஜா இது குறித்து தகவல் தரு கையில்:-

1999ம் ஆண்டு பிரிட்டனுக்குச் சென்றேன். அங்கு அகதி அந்தஸ்து கோரி தங்கியிருந்தேன். தற்பொ முது இலங்கையில் நிலைமை சீர டைந்து விட்டது என்று குறிப்பிட்டு தம்மை பிரிட்டன் அரசு திரும்பியனுப் பியதாகத் தெரிவித்துள்ளார். (இ-41)



வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவு தினத்தை யொட்டி கரையில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு நினைவுச் சுடர் எடுத்து வரும்படகுகளைப் படத்தில் காணலாம்.

### குடாநாட்டுப் பாடசாலைகள், திணைக்களங்கள் முன்பாக

# உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக இன்று மறியல் போராட்டம்

(திருநெல்வேலி)

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இன்று நண்பகல் 12 மணி முதல் ஒரு மணி வரை, யாழ்.குடாநாட்டு மாண வர்கள், தமது பாடசாலைகளுக்கு முன்பாக அடையாள மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அரச ஊழியர்கள், அரச சார் பற்ற நிறுவனங்களின் பிரதி நிதி கள், பொது அமைப்புக்கள் மற்றும்வர்த்தக சமூகத்தவர்கள் அனை வரும் இன்று நண்பகல் 12மணி முதல் 1மணி வரை கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகள், நேற்று நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு வழங்குவது, தொடர்பாக ஆரா யப்பட்ட கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது. இக் கலந்துரையா டலில் யாழ் பல நோக்குக் கூட்டுற வுச் சங்கத் தலைவர் சி.வி.கே.சிவ ஞானம், முனனாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமகாராசா மற்றும் எஸ்.அரவிந்தன், எஸ்.கஜன் ஆகி யோர் கலந்து கொண்டனர். (இ-43)

# ஈ.பி.டி.பியின் அலுவலகம் தாக்கப்பட்ட சம்பவம் விசாரணை நடத்த ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி அமைப்பி னரின் அலுவலகம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு இரண்டு நாட்களுக் குள் சந்தேக நபர்களை கைது செய் யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமா ரதுங்கா இராணுவத்தளபதி லயனல பலகல்லவுக்கும்,பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவுக்கும் அவசர உத் தரவு பிறப்பித்துள்ளார்.

ஜனநாயக வரையறைக்குள் இவ்வாறான செயல்களை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணமென ஈ.பி.டி.பியினர் தமக்கு முறையிட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட் டியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் கோரிக் கைகளுக்கு இணங்க நிராயுத பாணி களாக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பி புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய கட்சிகளைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு இருப்ப தாகவும் ஜனாதிபதி அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஈ.பி.டி.பி யினரின் முகாம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை அறிக் கையை இரு தினங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணித் துள்ளார். (த)

## அரச அதிபராக பத்மநாதன் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கான அர சாங்க அதிபராக செ.பத்மநாதன் நேற்றுப் பதவியேற்றுள்ளார்

யாழ். அரச செயலகத்தில் நேற்று அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (இ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசு, தமிழ்அரசியல் கைதிகளை உடன் விடுதலைசெய்ய வேண்டும்

## புளொட் அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல்கைதிகளின் உண்ணவிரதப் போராட்டத்துக்கு புளொட்அமைப்புதமது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கட்சியின் வவுனியா மாவட்ட அரசியல்பிரிவுத் தலைவர் வீ திருப்பதி அறிக்கைஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

நாட்டில் நிரந்தர சமாதானத்திற்கான சூழல் உருவாகியுள்ள இவ்வேளையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் அவசரகாலச் சட்டத்தின் கீழும் கைதாகி வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல்கைதிகளை விடுதலை செய்ய அரசுஉடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். விசாரணைக்கு உட்படுத்து அல்லதுவிடுதலை செய் என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழ்அரசியல் கைதிகள் உண்ணாவிரதமிருப்பதும் ஒருசிலஅரசியற் கட்சித் தலைவர்கள்தத்தமது சுய விளம்பரத்திற்காகசிறைச்சாலைகளுக்கு சென்றுவெறும் வாக்குறுதிகளை வழங்கி போராட்டத்தை நிறுத்துவது வாடிக்கையாகப்போய்விட்டது. இந்நிலையில் தற்பொழுது தமிழ் அரசியல் கைதிகளினால் தமது விடுதலையை குறிக்கோளாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ள உண்ணவிரதப் போராட்டத்திற்கு ஜனநாயக மக்கள்விடுதலை முன்னணி (புளொட்)யினராகிய நாம் எமதுமுழு ஆதரவினை தெரிவித்துக் கொள்வதுடன் ஒட்டுமொத்தமான தமிழ்அரசியல் கைதிகளின் விடுதலைக்கானவெகுஜனப்போராட்டத்திற்கும் எமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குகிறோம்.

தற்போது சிறைச்சாலைகளில் நடைபெற்றுவரும் உண்ணாவிரதப் போராட்டத்தின் விளைவாக உயிரிழப்பு எதுவும் ஏற்படுமிடத்து அது இன்றைய சமாதான புறச்சூழலை நிச்சயம் பாதிக்கவேசெய்யும். தமிழ்மக்களின் மனங்களில் கருக்கொண்டு வரும் நம்பிக்கையும் சிதறடிக்கப்பட்டுவிடும்.

எனவே இன்றைய சமாதானச் சூழ்நிலையை வலுவுள்ளதாக்கி தமிழ்மக்கள மத்தியில் நம்பிக்கையை மேலும் வளர்த்தெடுக்க உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை அலட்சியப்படுத்தி இழுத்தடிக்காமல் இதைஒரு அரசியல் பிரச்சினையாக அணுகி அரசு மனிதாபிமான ரீதியில் அவர்களை உடன் விடுதலை செய்யவேண்டும் என எதிர்பார்க்கின்றோம் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது.

(இ)

## இன்று மரக்கன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்டத்தில் உள்ள சகல அஞ்சல் அலுவலகங்களிலும் மரம் நடுகை விழா நடைபெறவுள்ளது.

அஞ்சல் அலுவலகங்களில் நாட்டுவதற்கான மரக்கன்றுகள் இன்று விநியோகிக்கப்படவிருப்பதால் அவற்றை வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ் மாவட்ட அஞ்சல் அத்தியட்சர் எஸ் சிவராசசிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

(வ)


# வலம்புரியின் கல்விச் சேவை

## அன்பார்ந்த அதிபர்களே!

யாழ் மாவட்டத்தில் இயங்கிவரும் பாடசாலைகளின் தோற்றம், அவற்றின் சமூகப்பிணைப்பு, நிறுவுநர் பற்றியகுறிப்பு, மாணவர்கள் படைத்தசாதனைகள், தற்போது பாடசாலைகளின் வளர்ச்சி, தேவைப்பாடுகள் என்பனவற்றை வெளிப்படுத்தி வரலாற்றுரீதியாக ஆவணப்படுத்தும்முயற்சியில் வலம்புரியின் கல்விக்குழு ஈடுபடவுள்ளது.

வாரத்தில் ஒருநாள்
வலம்புரியில் வலம் வரவிருக்கும்
**‘ எங்கள் கல்விச்சாலை ’**
பகுதியில் உங்கள் பாடசாலையும்
இடம்பெற வேண்டுமாயின்

உங்கள் சம்மதக் கடிதத்தை

**‘ எங்கள் கல்விச்சாலை ’**
**வலம்புரி**
இல.15 வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
வலம்புரியின கல்விக் குழுவினர் தங்களின் பாடசாலைக்கு நேரில் விஜயம் செய்வர்.

**அன்புசால் அதிபர்களே !**

உங்கள் பாடசாலைகளின் பழம் பெருமைகளை வெளிப்படுத்த வலம்புரிதரும் அரியவாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.

- ஆசிரியர்


# குடாநாட்டு அபிவிருத்திக்கு புதிய திட்டம் வகுக்கப்படும்

(மானிப்பாய்)

யாழ் குடாநாட்டின் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான திட்டமொன்று வகுக்கப்படவுள்ளதாக யாழ் குடாநாட்டின் அபிவிருத்திக்கான ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிதது்ள்ளது.

இந்நிறுவனத்தின் இயக்குனரான பொறியியலாளா க. யோகராஜா தலைமையில் ஆராய்வுத்திட்டம் வகுக்கப்படவுள்ளது.

யாழ் குடாநாட்டில் நன்னீர்வளம், நிலத்தடி நீர் உவராவதைத் தடுத்தல், கரையோரப் பகுதிகளில் கடலரிப்பைக் கட்டுப்படுத்தல், காலநிலைகளால் கட்டடங்களில் ஏற்படும் பாதிப்புகள் போன்றவை குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த-232)

## கைதடியில் வைத்தியர்கள் இல்லை

(மானிப்பாய்)

கைதடியிலுள்ள அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலையில், வெளி நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு வைத்தியர்கள் எவரும் இல்லாததனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலைக்குச் சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்வதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

(த-232)

## நெல்லியில் ஏறியவர் வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

நெல்லிக்கனி பறிப்பதற்காக மரத்தில் ஏறியவர் நிலத்தில் வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தையா இராஜேந்திரம் (வயது 65) என்ற வயோதிபரே மரணமானவராவார்.

நெல்லி மரத்தில் ஏறியவேளை கால்தவறி வீழ்ந்தபோது பிடரி நிலத்தில் அடிபட்டதாலேயே மரணம் சம்பவித்துள்ளது.

இவரது சடலம் மருத்துவப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இ-5-6)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் இன்று மு.ப 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற விருப்பதால் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

(உ-10)

# இலங்கை புனரமைப்புத் திட்டம் ஆராயும் மாநாடு ரோக்கியோவில் நடக்கும்

(கொழும்பு)

இலங்கையின் புனர் நிர்மாணப் பணிகள்குறித்து ஆராய்வதற்கான மாநாட்டை ரோக்கியோவில் நடத்துவதற்கு ஜப்பான் முழுமையான விருப்பம் தெரிவித்துள்ளது.

அண்மையில் ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்த அரசியல் யாப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ எல்.பீரிஸிற்கும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொரிகோகவாகுச்சுக்கும் இடையிலான சந்திப்பின் போது ஜப்பானிய வெளிவிவகாரஅமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கின் மனிதாபிமானப் பணிகளை கையாளுவதற்கு கூட்டுச்செயற்குழுக்களை அமைப்பது என புலிகளும் அரசும் தாய்லாந்தில் முடிவு செய்துள்ளதை தான் வரவேற்பதாகவும் இதனால் இலங்கைகுறித்து சர்வதேச சமுகத்தின் நம்பிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் இச்சந்தர்ப்பத்தில் ஜப்பானிய அமைச்சர் தெரிவித்தார்.

ஜப்பானிய அரசாங்கம் இலங்கையின் வடபகுதியில் ஆரம்பித்துள்ள திட்டங்கள் குறித்தும் ஜப்பானிய அமைச்சர்இதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ)

## குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

விபத்துச் சம்பவம் ஒன்றில் படு காயமடைந்தநிலையில் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மரணமடைந்துள்ளார்.

கடந்த மாதம் 29ம் திகதி கைதடிக்கும் நுணாவிலுக்குமிடையில் ஏற்பட்ட சைக்கிள், மோட்டார்சைக்கிள் விபத்தில் காயமடைந்த மானிப்பாயைச்சேர்ந்த முருகேசு வீரசிங்கம் (வயது 52) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகள் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

(இ:5-6)

### முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து

# 778 குடும்பங்கள் மீளவும் தமது சொந்த இடத்தில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 778குடும்பங்கள் தமதுசொந்த இடங்களுக்கு குடியேறியுள்ளனர்.

முல்லைத்தீவுமாவட்ட அரசசெயலகத்தினர் ஆகஸ்ட்மாத புள்ளிவிபரப்படி யாழ்ப்பாணத்திற்கு 611குடும்பங்களும் திருகோணமலைக்கு126குடும்பங்களும் மட்டக்களப்புக்கு4 குடும்பங்களும் மன்னாருக்கு 4குடும்பங்களும் வவுனியாவிற்கு 30குடும்பங்களும் ஏனைய பகுதிக்கு மூன்று குடும்பங்களும்மீளக்குடியமர்ந்துள்ளன.

(வ)

## கசிப்புக்குடித்த வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

அதிகளவில் கசிப்புக் குடித்ததால் மூச்சுத்திணறி இரத்த வாந்தியெடுத்து வயோதிபர் ஒருவர் மரணமாகியுள்ளார்.

நேற்று கசிப்பை அளவுக்கு அதிகமாக குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தவேளை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தாவடியைச்சேர்ந்த சரவணமுத்து சின்னத்துரை (வயது 62) என்ற வயோதிபரே மரணமானவராவார்.

இவரது சடலம் மருத்துவ பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு யாழ்மாவட்ட நீதிவான் இ. த. விக்கினராஜாவால் அனுப்பிவைக்கப்பட்டது.

சடலம் மருத்துவ பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இ-5-6)

## பதவிகள் வெற்றிடம்

(மானிப்பாய்)

யாழ் குடாநாட்டில் 254 மருத்துவ மாதுகளுக்கான வெற்றிடம் நிரப்பப்படாமல் இருப்பதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை யாழ் போதனா வைத்தியசாலையில் 150 தாதியர்களுக்கான வெற்றிடம் நிலவிவருவதாகவும், இதனால் மருத்துவ சுகாதார சேவைகளை முழுமையாக வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(த-232)

## கூட்டுறவுக் கடையில் திருடர் கைவரிசை

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள வர்த்தகத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் கடையில் பாவனைப் பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக யாழ் பொலிசாரிடம் முறையிடப்பட்டதையடுத்து, அவ்விடத்திற்குச் சென்ற பொலிசார் திருடர்களின் கைரேகை அடையாளங்களைப் பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை திருட்டுப் போவதற்கு முன்னர் இருந்த பொருட்களின் விபரங்களை அறிவதற்காக களஞ்சியக் காப்பாளரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

(இ-5-6)

# அரசு - புலிகள் 2வது சுற்று பேச்சில் முக்கிய விடயங்கள் ஆராயப்படும்

## அதனை 5 தினங்கள் நீடிக்கவும் இரு தரப்புகளும் இணங்கின

(கொழும்பு)

**தாய்லாந்தில் இம்மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள், நவம்பர் 4 ஆம் திகதி வரையான 5 தினங்கள் இடம் பெறவுள்ளன.**

**இதற்கு அரசு மற்றும் புலிகள் தரப்பினர் இணங்கியிருப்பதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

முதற்சுற்றுப்பேச்சு கடந்த 16, 17, 18 ஆம் திகதிகள் தாய்லாந்தில் இடம்பெற்ற போது, இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களை ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை வைத்துக்கொள்வதெனப் பேச்சுவார்த்தையில்ஈடுபட்ட தரப்புகள் தீர்மானித்தமை தெரிந்ததே.

இரண்டாம் சுற்றில் முக்கிய விடயங்களை ஆராய வேண்டியிருப்பதைக் கருத்தில் கொண்டே இவ்வாறு 5தினங்கள் பேச்சுக்களை நீடிக்க உடன்பட்டிருப்பதாகவும், முதல்சுற்றில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் அமுல்படுத்தப்பட்ட விதம் குறித்து தீவிரமாக ஆராய வேண்டியிருப்பதுடன், இருதரப்புக்கும் மத்தியிலான நம்பிக்கையை மேலும் கட்டியெழுப்புவதற்கு இது முக்கியமான விடயம் எனவும் நோர்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கடந்த வாரம் இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போது இது குறித்து ஆராயப்பட்டது.

இது இவ்விதமிருக்க, இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகளின் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனும், நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தியும்கலந்துகொள்ளவிருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(உ)

## கேடிகளை பிடிக்கச் சென்ற பொலிஸார்க்குக் கடி

### துன்னாலையில் சம்பவம்

(அச்சுவேலி)

பருத்தித்துறை நீதிமன்றத்தின் பிடியாணைக்குரிய கேடிகளை கைதுசெய்ய சென்ற பொலிஸார், அவர்களின் வாய்க்கடிக்கு இலக்காகி கைகளில் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை அதிகாலை 3.00மணியளவில் துன்னாலை ஆட்டுப்பட்டிக் கொலனியில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக தலைமறைவாகித்திரிந்தவர்களானஇதே இடத்தைச் சேர்ந்த மூவரை, பிடியாணை மூலம் கைது செய்யுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அ.பிறேம் சங்கர் நெல்லியடி பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவின் பேரில் சந்தேக நபர்களைக் கைது செய்யச் சென்ற நெல்லியடி பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள்களான ஆர்.கதிர்காமநாதன்(வயது-32), எம். புஷ்பகுமார் (வயது-25), கே.அபேரத்ன(வயது-43) ஆகியோரே சந்தேக நபர்களின் வாய்க்கடிக்கு இலக்காகி, மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

எனினும் பொலிஸாரின் சாதுரியத்தினால்சந்தேகநபர்களில் இருவர் மடக்கிப்பிடிக்கப்பட்டனர். மற்றொருவர் தலை மறைவாகியுள்ளார்.

(உ-14)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உலக உளநல நாளையொட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை 'போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர் உள சமூகப் பராமரிப்பு' எனும் தலைப்பில் பேராசிரியா தயா சோமசுந்தரம் கருத்துரை வழங்கவுள்ளார்.

சென் பற்றிக்ஸ் கல்லூரி வீதியில் அமைந்துள்ள அகவொளி குடும்பநல நிலையத்தில் இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள எவரும் பங்கேற்கலாம் எனவும் பங்கேற் போர் முன் கூட்டியே தமது பெயர்களை இல. 15, கச்சேரி வீதி, நல்லூர் என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் வாராந்த நிகழ்வுகளில் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.30 -மணிக்கு கலா பூஷணம் எல். திலகநாயகம் போலின் இன்னிசை நிகழ்வு இடம் பெறவுள்ளது.

(உ-18)

## பஸ் விபத்தில் பாடசாலை மாணவர்கள் படுகாயம்

(கொழும்பு)

தனியார் பஸ்வண்டியொன்றுநேற்று விபத்துக்குள்ளாதினால் இரு பாடசாலை மாணவர்கள் படுகாயமடைந்த நிலையில் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு-காலி வீதியில் அமைந்துள்ள மொகத்தரமுல்ல வித்தியாலயத்துக்கு அருகிலேயே இவ்விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இவ்வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரியின் சமிக்ஞையையும் மீறி வாகனசாரதி அதிவேகமாக வாகனத்தை செலுத்தியதனாலேயே இவ்விபத்து ஏற்பட்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் போக்குவாத்து பொலிஸார் சாரதியை கைது செய்துள்ளனர்.

(உ-6)

## மட்டு. கைதிகள் நால்வர் நிலை கவலைக்கிடம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகளில் 4 பேரின் நிலை மோசமடைந்துள்ளதாக மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் ஏ. குணசேகர தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்டு விசாரணைகள் எதுவுமின்றி மட்டக்களப்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக் கோரி நேற்று 4 வது நாளாகவும்தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, களுத்துறைச் சிறையில் நேற்று 7 வது நாளாகவும், வெலிகடைச் சிறையில் நேற்று 6 ஆவது நாளாகவும் உண்ணாவிரதம் தொடர்ந்தது.

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகளில் 8 பேரின் நிலைமை மோசமாக உள்ளதும் தெரிந்ததே.

(உ-8)

## நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு இந்தியாவின் ஆதரவு முக்கியம்

### யோசப் எம். பி. இந்தியாவில் பேட்டி

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு இந்திய அரசாங்கத்தினதும் மககளினதும் ஆதரவு முக்கியமானது. மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இவ்வாறு தெரிவித்துளளார்.

தமிழ் நாட்டிற்கு சென்றுள்ள ஜோசப் எம்.பி. அங்கு பேட்டியளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொடா தடைச் சட்டத்தின் கீழ் கூடலூர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் தேசிய இயக்க தலைவர் பழ.நெடுமாறனை சந்திப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாகவும், அந்த முயற்சிகள் பலனளிக்கவில்லையெனவும் சுட்டிக்காட்டினார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்றவகையிலும் அணி சேரா நாடு என்றவகையிலும் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா உறுதியான ஆதரவை வழங்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

(உ-7)

## தேவி விழா

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு வயிரவர் ஆலய நவராத்திரிகால தேவி விழா நேற்று ஆரம்பமானது.

எதிர்வரும் 15 ஆம் திகதி விஜயதசமி இடம்பெறவுள்ளது.

(உ-10)

## பாடநூல் விநியோகம் டிச. நடுப்பகுதி வரை

(கொழும்பு)

கல்வி வெளியீட்டு திணைக்களம் அடுத்த ஆண்டுக்கான இலவச பாடநூல்களை இவ் வருடமுடிவிற்குள்ளேயே பிரதேச கல்விப்பணிப் பாளர்களூடாக மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆணையாளர் எஸ். எஸ். குணவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்தஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி ஆரம்பமான இப்பாடநூல்விநியோகத்தை எதிர்வரும்டிசம்பர் மாதம்15ஆம் திகதிக்குள் முடிப்பதற்கு நடவடிக்கைஎடுத்துள்ளது.(உ-7)

## வளைகுடா யுத்தம் ஆரம்பமானால் சர்வதேச உதவிகள் கைநழுவலாம்

### அமைச்சர் மிலிந்த தெரிவிப்பு

வளைகுடா யுத்தமொன்றுஇடம்பெறின்அதுசர்வதேச சமூகம் இலங்கையில் இருந்து தனது கவனத்தை திசைதிருப்பக்கூடிய நிலையை உருவாக்கும்.

இதன் காரணமாக சமாதான முயற்சிகளினால்உருவாகியுள்ள வாய்ப்புகள் கைநழுவிப் போய்விடலாம் என பொருளாதார மறுசீரமைப்பு விவகார அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

இதனைக் கருத்தில் கொண்டு இலங்கையின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காக இரண்டு சர்வதேச மாநாடுகள் நடைபெறவுள்ளனாகவும்,

இலங்கையின் உடனடித் தேவைகளை இனம் காண்பதற்கான இம் மாநாடுகள் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் ஒன்றும், அடுத்தவருட ஆரம்பத்தில் ஒன்றுமாக நோர்வே ஏற்பாட்டில் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துளளார்.

டிசம்பர் மாதமாநாட்டில் உடனடிப்பயன்களை உண்டாக்கக்கூடிய திட்டங்கள் குறித்தும், கல்வி, சுகாதாரவசதிகள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

இலங்கையின் நீண்டகாலத் தேவைகளை இனம் காண்பதற்கான மாநாடு அடுத்த வருடமே இடம்பெறும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

## தேசிய விளையாட்டு போட்டிகள் 11இல்

(கொழும்பு)

எதிர்வரும் 10 ஆம் திகதி நடை பெறவிருந்த தேசிய விளையாட்டுப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற் போடப் பட்டுள்ள இப்போட்டிகள் மறுநாள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இணங்க இம்மாதம் 11 ஆம் திகதி ஆரம்ப நிகழ்வுகளும் தொடர்ந்து12,13,14, ஆம் திகதிகளிலும் நிகழ்வுகள் கொழும்பு சுபதாஸவிளையாட்டு அரங்கில், நடைபெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

(உ-10)

# ஈராக் மீது மேற்கொள்ளப்படும் எந்வொரு நடவடிக்கையையும் முறியடிப்பேன்

## சதாம் ஹுசைன் சூளுரை

(பக்தாத்)
ஈராக் மீது மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகளையும் முறியடித்து இறுதியில் தமது நாடே வெற்றிபெறுமென ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் சூளுரைத்துள்ளார்.

ஈராக்கிற்கு எதிராக கடுமையான தீர்மானங்களை ஐக்கியநாடுகள் சபை நிறைவேற்ற வேண்டுமென அமெரிக்கா மேற்கொண்டு வரும் ராஜதந்திர நடவடிக்கைகளையும், ஈராக் மீது தாக்குதல் மேற்கொள் ளப்படும் என்று அமெரிக்கா ஜனா திபதி புஷ்ஷின் கருத்துக்களையும் சதாம் ஹுசைன் கடுமையாகச் சாடி யுள்ளார்.

மேலும் ஈராக்கின் ஆயுதத் திட் டங்கள் குறித்து உண்மைக்கு மாறான தகவல்களை அமெரிக்கா வெளி யிட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஈராக்கின் ராணுவத்திட்டங்கள் பற்றிப்பேசுகையிலேயே சதாம் மேற் படி கருத்துக்களை வெளியிட்டிருக் கிறார்.

(சு-04)

# ஐவரிக்கோஸ்டில் மீண்டும் போர் மூளும் அபாயம்

## இருதரப்பினரும் உஷார் நிலையில்

(லண்டன்)
ஐவரிக் கோஸ்டில் மீண்டும் உள் நாட்டுப் போர்மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த19ஆம் திகதிமுதல் ஐவரிக் கோஸ்டில் அரசுபடையினருக்கும் கிளர்ச்சியாளர் படையினருக்குமி டையேபோர் நடைபெற்றுவருகிறது.

பலநூறு மக்கள் பலியான இப் போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில்மேற்கு ஆபிரிக்க நாட்டின 6 அமைச்சர்களைஉள்ளடக்கிய குழு ஒன்றுஐவரிக்கோஸ்டில் போர் நிறுத்த ஒப்பந்தத்தைஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

கடந்த இருநாட்களில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுமென்று அறிவித்திருந்தனர் ஆனால் திட்டமிட்டபடி அரசுபடையி னருக்கும்கிளர்ச்சிப்படையினருக்கும் இடையில் போர்நிறுத்தஒப்பந்தம் கைச்சாத்திடப்படாத நிலையில் அங்கு மீண்டும் இருதரப்பினருக்குமிடை யில்மோதல்கள் வெடித்துள்ளன. கிளர்ச்சிப்படையினரின் கட்டுப்பாட் டுக்குள் இருக்கும் டுவாக் நகருக்கு ஐவரிக்கோஸ் நூற்றுக்கணக்கான படையினை அனுப்பியுள்ளதாக அந்த நாட்டில்தளம் அமைத்திருக் கும் பிரான்ஸ் படையினர் தெரிவித் துள்ளனர். அது போலவே சுமார் 40கவச வாகனங்கள் உட்படபெ ரும் எண்ணிக்கையான படையி னரை கிளர்ச்சிப்படையினரும் அந் நகருக்கு அனுப்பியுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளன. இதனிடையே போர் நிறுத்த உடன்பாட்டில் ஐவ ரிக்கோஸ்அரசுகையெழுத்திட தாம தித்தால தாங்கள் அமைதி முயற்சி யைக் கைவிடுவோம் என்று மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் எச்சரித்தனர்.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்படாத நிலையிலும் இருத ரப்பினரும் படையினரை போருக்கு தயார்படுத்தி வருகின்ற நிலையி லும் ஐவரிக்கோஸ்டில் மீண்டும் போர் மூளும் அபாயம்ஏற்பட் டுள்ளது

(சு)

# மினிபஸ் மோதியதில் 27பேர்பலி, 13பேர் காயம்

## பிரேஸிலில் சம்பவம்

(பிரேசிலியா)
பிரேஸிலின் சேர்ஜிப் பகுதியில் மினிபஸ் மோதியதில்27பேர் பலி யாகினர்13பேர் படுகாயமடைந் துள்ளனர்.

மேலும் இவ்விபத்துப்பற்றித் தெரிய வருவதாவது, மினிபஸ் ஒன்றும் கார்ஒன்றும் உரம் ஏற்றிக் கொண்டுவந்த றக் வண்டியில் பல மாக மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றது.

இவ்விபத்தின் பேது 3 வாகனங்களும்தீப்பற்றிக் கொண் டதாகவும்,அவை முற்றாகவே எரிந்து சேதமடைந்துள்ளதாக வும்தீயணைப்புப் படையினர் தெரி வித்துள்ளனர்.

(சு-04)

# கோவையில் ரயில் தடம்புரண்டது

(சென்னை)
கோவை ரயில் நிலையத்தில் பயணிகள் ரயில்ஒன்று நேற்றுதடம் புரண்டது.

இவ்விபத்தில் அதிர்ஷ்டவசமா கப் பயணிகள்அனைவரும் காயம் எதுவுமின்றித் தப்பித்துக் கொண் டனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவரு வதாவது,

கொல்லின் கோவையிடையே யான பயணிகள் ரயில் ஒன்று நேற்று கோவைக்கு வந்தது. ரயி லின் ஆறாவது பிளாட் பாரத்தில் நிற்பதற்காக இந்த ரயில் வந்த போது அதன்மூன்று பெட்டிகளும் திடீரென்று தடம்புரண்டன.

தண்டவாளத்திலிருந்த சிலிப்பர் கட்டைகள் நீண்டகாலமாக மாற்றப் படாமல் இருந்ததால் ரயில் வரும்போது இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இதனையடுத்து தகவலறிந்த ரயில்வே உயரதிகாரிகள் விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டபின் மீட்புப்பணிகள்மேற்கொள்ளப்பட்டன.

(சு)

# வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவர ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை

(ஜெருசலேம்)
இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனா களுக்குமிடையே கடந்த இரண்டு வாரங்களாக இடம் பெற்றுவரும் வன் முறைகளுக்கு ஐரோப்பிய ஒன்றி யம் தீர்வுகாண முன்வந்துள்ளது. இரு தரப்பினருக்குமிடையே இடம் பெறும்வன் முறைகளை முடிவிற்கு கொண்டுவரும் வகையில் ஐரோப் பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கை திட்டமிடல் தலைவர் சேவி யர் சொலானா ராஜதந்திர நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ளார்.

பலஸ்தீனர்கள் இருவரை இஸ் ரேலியப்படையினர் சுட்டுக்கொல்லப் பட்ட நிலையிலேயே ராஜதந்திர மட்டப் பேச்சு வார்த்தைகள் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. எனினும், இப்பேச்சுவார்த்தைகள் தொடர்பான எவ்வித தகவல்களும் வெளியிடப் படவில்லை

இதேவேளை பலஸ்தீனத் தலை வர் யஸீர் அரபாத்தை சொலனா நேற்று சந்தித்துப்பேச்சு நடத்தியுள் ளார்

(சு-04)

# எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர பாகிஸ்தான் மறுப்பு

## இந்தியப் பிரதமர் வாஜ்பாய் குற்றச்சாட்டு

(புதுடில்லி)
எல்லை தாண்டிய பயங்கரவா தத்தை முடிவிற்குக் கொண்டுவர பாகிஸ்தான் தொடர்ந்தும் தவறி வருவதாக இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் குற்றஞ் சாட்டியுள்ளார்.

மேலும் காஷ்மீர் மாநில தேர் தல்களை குழப்பும் நடவடிக்கைக ளுக்குபாகிஸ்தான் சூத்திரதாரி யாக இருந்து உதவி வருவதாகவும் இந்தியப் பிரதமர் கூறியிருக்கின் றார்.

பயங்கரவாதம், பேச்சுவார்த்தை ஆகிய இரண்டும் ஒரே சந்தர்ப்பத் தில் எப்போதும்இடம்பெறமாட்டாது. எனவே பாகிஸ்தான் பயங்கரவா தத்தை கைவிட்டால் மட்டுமே பேச்சுக்களை ஆரமபிக்க முடியும் என இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை,காஷீமீர் மாநில தேர்தலின் கடைசிக்கட்டவாக்க ளிப்பு இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சு-04)

### நூலக விஞ்ஞானம்

| | |
|---|---|
| கவிதா சிறிநந்தன் | வட்டக்கச்சி |
| கணேசன் துஷாயினி | கிளிநொச்சி |
| கெங்காதரன் விஜிதா | வட்டுக்கோட்டை |
| சபாரத்தினம் எழில் | கிளிநொச்சி |
| வின்சஸ்லஸ் மதுரநாயகம் மெறிற்றா | ஆனைக்கோட்டை |
| பீதாம்பரம் ஜெகப்பிரியா | வல்வெட்டித்துறை |
| செல்லப்பா சுபத்திரா | மானிப்பாய் |
| சங்கீதா நடராஜா | விசுவமடு |
| நடராஜா ஜசோதா | யாழ்ப்பாணம் |
| கிருபனா கிருஷ்ணபிள்ளை | உடுப்பிட்டி |
| கணநாதன் சாந்தினி | அரியாலை |
| பாலசிங்கம் நிதர்சினி | சுன்னாகம் |
| தங்கராஜா சிவகலா | தெல்லிப்பழை |
| சந்திரசேகரம் விஜிதா | சாவகச்சேரி |
| தங்கராஜா சிவப்பிரியா | இடைக்காடு |
| கணேசரட்ணம் ஜெயமலர் | கரவெட்டி |
| செல்வராஜா பவானி | கரவெட்டி |
| தியாகராஜன் தீபா | தெல்லிப்பழை |
| கதரின்சோபனாதேவதாஸ் | திருநெல்வேலி |
| பூரணசாஜகம்யோதினி | யாழ்ப்பாணம் |
| அம்பிகைபாலன் கலைமகள் | ஆனைக்கோட்டை |
| கார்த்திகேசு கல்யாணி | புலோலி |
| சண்முகலிங்கம் சிவரஞ்சினி | பண்டத்தரிப்பு |
| தயாவதி தெய்வேந்திரம்பிள்ளை | எழதுமட்டுவாழ் |
| லட்சுமணன் அபிராமி | பருத்தித்துறை |
| விஜிதா இராஜேந்திரம் | சாவகச்சேரி |
| குமாரசாமி பகீரதி | மானிப்பாய் |
| செல்வநாதன் கவிதா | யாழ்ப்பாணம் |
| மாணிக்கவாசகர் சிறிதர்சினி | தெல்லிப்பழை |
| வாமசிவன் தக்சாயினி | யாழ்ப்பாணம் |
| வசந்தி கணேசதுரை | திருநெல்வேலி |
| பத்மநாதன் பிரகாசினி | யாழ்ப்பாணம் |
| மகேந்திரன் சுபேந்திரன் | யாழ்ப்பாணம் |
| ரட்ணசிங்கம் ரணேசன் | யாழ்ப்பாணம் |
| கணபதிப்பிள்ளை திரவியகுமார் | தாழையடி |
| தயாபரன் சுதன் | யாழ்பாணம் |
| சின்னக்கண்ணு செந்தில்நாதன் | நாரந்தனை |
| கண்ணதாசன் | கந்தர்மடம் |
| சின்னராஜா சிவரூபன் | இணுவில் |
| தவராஜா சுஜேந்திரன் | வேலணை |
| பவளகாந்தன் ஜெயபரன் | கரணவாய் மத்தி |
| கந்தையா சந்திரகாந்தன் | மயிலிட்டி |

### விவசாயம்

| | |
|---|---|
| சுப்பிரமணியம் கஜாமதி | புதுக்குடியிருப்பு |
| நாகப்பிள்ளை அருந்தினி | யோகபுரம் |
| குகதாசன் பார்த்தீபன் | யோகபுரம் |
| விஸ்வலிங்கம் ராஜகுமாரி | குருக்கள் மடம் |
| ரொபேட்விலுவானி ராஜா அன்ரனீஸ் | நெடுந்தீவு |
| வீரசிங்கம் சாந்தரூபன் | உடுப்பிட்டி |
| கணேசமூர்த்தி பிரேமதாசன் | கரவெட்டி |
| கனகலிங்கம் ஜெயகோபி | மானிப்பாய் |
| வேலாயுதபிள்ளை ரேணுகரூபன் | வரணி |

### நாடகமும் அரங்கியலும்

| | |
|---|---|
| ஏ. சிவபாலன் | பரந்தன் |
| நாகதாசன் சிவதாசன் | கிளிநொச்சி |
| முருசேசு கவுசினி | மல்லாவி |
| நாகராஜா தாரணி | கிளிநொச்சி |
| சிவசுப்பிரமணியம் திவாகர் | கிளிநொச்சி |
| சங்ரப்பிள்ளை பத்மராஜா | கோண்டாவில் |
| ஐயம்பிள்ளை சிவலோகநாதன் | தெல்லிப்பழை |
| ஞானமூர்த்தி திரணன் | அளவெட்டி |
| மகேந்திரன் செல்வேந்திரன் | நீர்வேலி |
| யோசப் யோன்மதுரன் | சண்டிலிப்பாய் |
| கணேஸ் கலாயினி | மானிப்பாய் |
| சின்னத்தம்பி சுகந்தினி | சுன்னாகம் |
| சவுந்தரநாயகம் அல்பேட் றீகன் | யாழ்ப்பாணம் |
| கந்தையா சுவாமிநாதன் | புத்தூர் |
| பரமநாதன் விஜிந்தன் | உடுவில் |
| உதயகுமார் சசிக்குமார் | மல்லாகம் |
| உஷா பொன்னம்பலம் | அளவெட்டி |
| கணேசலிங்கம் பகீரதி | உரும்பிராய் |
| குணரட்ணம் சபேசினி | சுன்னாகம் |
| பேர்லின் நிரஞ்சினி | மானிப்பாய் |
| கந்தசாமி உதிஸ்வரன் | உரும்பிராய் |
| கந்தசாமி ஆனந்தபிரபு | அளவெட்டி |
| சிவலிங்கம் இரணமன் | அச்சுவேலி |
| மகேஸ்வரன் கஜேந்திரா | நல்லூர் |
| ஏரம்பு நந்தகுமார் | மானிப்பாய் |
| கிருஷ்ணராஜா கஜந்தன் | சுன்னாகம் |
| மகாதேவன் திவாகர் | யாழ்ப்பாணம் |
| சுப்பிரமணியம் கமலதாஸ் | இணுவில் |
| தங்கவடிவேல் ஜெகன் | கேண்டாவில் |
| கனகரட்ணம் அரியரட்ணம் | சுன்னாகம் |
| சண்முகலிங்கம் முகுந்தன் | இணுவில் |
| கிருஷ்ணபிள்ளை சுதாகரன் | ஏழாலை |
| கேசினி மணிராஜா | மானிப்பாய் |
| சிவலிங்கம் மரியா பத்மதர்சினி | அல்வாய் |
| சிவராஜா தர்மினி | சுன்னாகம் |
| பொன்னுத்துரை உதயராஜ்ஜினி | வரணி |
| மகேஸ்வரன் சுதாகரன் | சுன்னாகம் |
| துரைசிங்கம் ரஜீத்குமார் | சுன்னாகம் |
| கனகலிங்கம் தயாகோபி | மானிப்பாய் |
| வேகவனம் சுமன்ராஜ் | குருநகர் |
| மரியநாயகம் தனுசீலி | சுண்டிக்குளி |
| நவரட்ணராஜன் நிலானி | ---------------- |
| அருமைநாயகம் ரெஜிடெனியலா | சுன்னாகம் |
| ஏரம்பமூர்த்தி சுகந்தினி | நீர்வேலி |
| விஜயலட்சுமி கந்தசாமி | காரைநகர் |
| கியோகினி கிருஷ்ணன் | சுன்னாகம் |
| வேணுகா நவரட்ணலிங்கம் | சுன்னாகம் |
| அனுஷா தவக்குமார் | நல்லூர் |
| ஹெரிசாசசிகலா அன்ரன்யோகநாதன் | யாழ்ப்பாணம் |
| சிவராசா தர்சினி | தெல்லிப்பழை |
| ராஜரட்ணம் தர்மிலா | சுன்னாகம் |
| நிரஞ்சி சிவசுப்பிரமணியம் | ஆனைப்பந்தி |
| டான்சிகா யேசுரட்ணம் | மிசுருவில் |
| சிறிரஞ்சினி ராஜேந்திரம் | யாழ்ப்பாணம் |
| யேசுதாசன் சர்மிலலோகினி | குருநகர் |
| விசுவலிங்கம் ராசகுமார் | குருக்கள் மடம் |

### சங்கீதம்

| | |
|---|---|
| தேவதுரை வசந்தகுமாரி | கோண்டாவில் |
| வீரகுமார் வகுட்சா | சம்பியன் பதி |
| துஷ்யந்தி விஸ்வநாதக் குருக்கள் | கரவெட்டி |
| சிவலோகநாதன் சிவமதி | மிருசுவில் |
| வைரவநாதர் தீபா | கைதடி |
| நாகேஸ்வரி சிவலிங்கம் | மிருசுவில் |
| சின்னராஜா காமினி | இருபாலை |
| திருநாவுக்கரசு தர்சினி | திருநெல்வேலி |
| சுப்பிரமணியம் தயாநந்தினி | அச்சுவேலி |
| அகிலா கந்தசாமி | கரவெட்டி |
| கார்த்திகேசு உதயகலா | மிருசுவில் |
| ஜெயபாமினி கிருஷ்ணசாமி | உடுப்பிட்டி |
| நிக்ளஸ் மரினா | பண்டத்தரிப்பு |
| ஐயாத்துரை அனோஜா | அல்வாய் |
| ரமா சிவக்கொழுந்து | கரவெட்டி |
| பாலசிங்கம் சுமாலியா | புத்தூர் |
| தர்மலிங்கம் தயானி | கரவெட்டி |
| பாலசுப்பிரமணியம் சங்கீதா | யாழ்ப்பாணம் |
| ராஜதுரை ரனிதா | சண்டிலிப்பாய் |
| தெய்வேந்திரம் ரூபினிசாந்தி | நல்லூர் |
| தங்கவேல் ரஜிதா | பருத்தித்துறை |
| அருளப்பன் ஜேசுமேரி | யாழ்ப்பாணம் |
| சின்னத்துரை ஜெயமதி | யாழ்ப்பாணம் |
| கோகுலவாணி காசிநாதர் | மிருசுவில் |
| தர்மகுலசிங்கம் ரஜிதா | வரணி |
| தனபாலசிங்கம் சுரேந்தினி | மீசாலை |
| ராசநாயகம் கௌசலா | கொற்றாவத்தை |
| ரஞ்சித் ரஞ்சிதா | சண்டிலிப்பாய் |
| வின்சென்ட் அன்ரனி சியாமளா | இளவாலை |
| சிவராசா அருள்நந்தி | கரவெட்டி |
| புவனேந்திரன் சுதா | பருத்தித்துறை |
| யோகராசா விகிர்தா | புத்தூர் |
| வசந்தி கணேசதுரை | திருநெல்வேலி |
| குணராசா சிசாந்தி | ------------------ |
| ரட்ணம் தனகாம்பிகை | அராலி |

### நடனம்

| | |
|---|---|
| ஆனந்தன் வைதேகி | உடையார் கட்டு |
| பூபாலசிங்கம் தயானி | கிளிநொச்சி |
| மாலினி செல்வராஜ் | புதுக்குடியிருப்பு |
| உதயகுமாரி சிவப்பிரகாசம் | பூநகரி |
| செல்வப்பெருமாள் பத்மாவதி | கிளிநொச்சி |
| இர்ாமசாமி ரஞ்சனா | கிளிநொச்சி |
| லக்ஷ்மனர் நிசாந்தினி | இளவாலை |
| முருகசோதிராஜ் சந்திரவதனா | சுழிபுரம் |
| சந்திரசேகரம் குணாநிதி | மீசாலை |
| விஸ்வநாதர் தர்சினி | புத்தூர் |
| ராஜரட்ணம் தமயந்தி | கோப்பாய் |
| கிருஷ்ணபிள்ளை கிருஷாந்தி | கரவெட்டி |
| நாகமுத்து புஷ்பலதா | வல்வெட்டித்துறை |
| சிவசம்பு கௌசலை | மீசாலை |
| ராஜரட்ணம் தர்சினி | நீர்வேலி |
| சிவநேசன் தக்சாயினி | ஏழாலை |
| அருமைநாயகம் அம்பிகை | தெல்லிப்பழை |
| யோகநாதன் கஸ்தூரி | தெல்லிப்பழை |
| யேசுநாயகர் டொறின்விசிதா | மானிப்பாய் |

# இன்று ஒரு தகவல்

## என்ன எதிர்பார்க்கிறார்கள்?

ஒரு நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவருடைய உறவினர் ஒருவர் நேர்முகத் தேர்வொன்றுக்குப் போயிருந்தாராம், மிகவும் பொறுப்பாகவும், கவனமாகவும் செயல்படவேண்டிய பதவிக்கான 'நேர்காணல்' அது. இவர் எழுத்துத் தேர்வில் ஏராளமான மதிப் பெண்கள் பெற்றிருந்தார். ஏராளமான சான்றிதழ்களும் வைத்திருந்தார். நேர்காணலில் கேட்கப்பட்ட எல்லாக் கேள்விகளுக்கும் சரியான பதில்களைத்தான் சொன்னார். இருந்தாலும் அந்த நேர்முகத் தேர்விலே அவர்தேர்ந்தெடுக்கப்படவில்லை.

என்ன காரணம் என்றுபின்னர் விசாரித்தபோது தான் விபரம் தெரிந்ததாம், அந்த நேர்காணலின் போது இவர் நடந்து கொண்டமுறையில் சில தவறுகள் நடந்து போய் விட்டதாம். முக்கியமாக இரண்டு தவறுகள், ஒன்று. அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டு முடிப்பதற்குள்ளேயே இவர் பதில் சொல்ல ஆரம்பித்து விட்டாராம், இரண்டாவது- இவர் நாற்காலியில் தாராளமாக இயல்பாக சாய்ந்து உட்காராமல் நாற்காலி முனையிலே உட்கார்ந்திருந்தாராம். இந்த இரண்டு விதமான செயற்பாடுகளும் இவர் அவசரப்படுகிறவர், பதட்டப்படுகிறவர் என்பதற்கான அடையாளம். பார்க்கப் போகின்ற வேலைக்கு அவசரம், பதட்டம் இவை இரண்டும் இருக்கக் கூடாதாம். அதனால் 'மார்க்' இருந்தும், சான்றிதழ்(சர்டிபிகேட்) இருந்தும் அவ்வேலை வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை.

வேலை கொடுப்பவர்கள் நம்மிடமிருந்து என்னதான் எதிர்பார்க்கிறார்கள்? இதைத் தெரிந்து வைப்பது நல்லது முதலில் ... மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் திறமை, நீங்கள் நினைப்பதை அழகாகத் தொகுத்து வகைப்படுத்திச் சொல்லத் தெரிகிறதா என்று பார்ப்பார்கள். உங்கள் திட்டங்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் வெளிப்படுத்த உங்களால் முடிகிறதா என்று பார்ப்பார்கள். இதற்கு என்ன செய்வது? குழப்பமில்லாமல் சிந்திக்கவேண்டும். குழப்பமில்லாமல் பேசவேண்டும்.

இரண்டாவது விஷயம்; புத்திசாலித்தனம் ஏற்றுக் கொள்ளப்போகிறவேலையை உங்களால் நல்ல விதமாகச் செய்ய முடியுமா? அதை எந்தெந்த வழியில் செய்யலாம் என்பதை உங்களால் தீர்மானிக்க முடியுமா? அந்த வேலைக்கான புதுப் புது யோசனைகளை உங்களால் சொல்ல முடியுமா? என்று பார்ப்பார்கள்.

மூன்றாவது தன்னம்பிக்கை- உங்களுக்கு அது உண்டா என்று பார்ப்பார்கள், எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்க வேண்டும். எப்படிப்பட்ட மனிதர்களையும் சமாளிக்கிற தைரியம் வேண்டும் மற்றவர்களை நமக்குச் சாதகமாக திருப்பக் கூடிய தன்னம்பிக்கை வேண்டும்.

நாலாவது! பொறுப்புக்களை முன்வந்து ஏற்றுக் கொள்ளுதல்- பொறுப்புக்களிலேயிருந்து நழுவிப் போகஆசைப்படாமல் செய்துமுடிக்கவேண்டும்.

ஐந்தாவது! முன்வருதல்- வேலையின் முக்கியத்துவம் உணர்ந்து அதனை ஏற்றுக் கொண்டு தகுந்தநடவடிக்கைகளைத் தயங்காமல் எடுக்க முன்வரவேண்டும்.

ஆறாவது! தலைமைத்துவம் நாலுபேருக்குத் தலைமை தாங்கி நல்ல விதத்தில்நடந்து கொள்ளத் தெரிகிறதா? என்று பார்ப்பார்கள்.

ஏழாவது! கற்பனைத்திறன் சில பிரச்சினைகள் வரக் கூடுமென்றுமுன்கூட்டியே ஊகித்து அதற்குத் தகுந்த மாதிரி நடவடிக்கை எடுக்கிற திறமை உண்டா என்று பார்ப்பார்கள்.

எட்டாவது! வளைந்து கொடுத்தல்—சூழ் நிலைக்குத் தகுந்த மாதிரி மாற்றங்களுக்குத் தகுந்தமாதிரிஅனுசரித்து நடக்கத் தெரிகிறா என்று பார்ப்பார்கள். அடுத்தது – திறமைகளை வெளிக்கொணரும்திறமை மற்றவர்களிடம் இருக்கிறதிறமையைக் கண்டுபிடித்து, அதை நல்ல விதத்தில் ஊக்கப்படுத்திப் பயன்படுத்தத் தெரியுமா என்று பார்ப்பார்கள். அடுத்தது சுய அறிவு-மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறதா என்பது முக்கியம்.

அடுத்தது போட்டி மனப்பான்மை-மற்றவர்களை ஒப்பிட்டுப் பார்த்து அதைவிட ஒருபடிமேலே வரவேண்டும் என்கிற குணம் வேண்டும்,

அடுத்தது குறிக்கோளை வெல்லுதல் - குறிக்கோளைச் சவாலாக எடுத்துக் கொண்டு அதை அடைய வேண்டும். அதன் பின்னர் வேறு திறமைகள்-பதவிக்கு வேண்டிய திறமைகள் தவிர மற்றைய திறமைகள் எதுவும் உண்டா என்பது முக்கியம். நமக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள் நம்மிடமிருந்து இவ்வளவையும் எதிர்பார்ப்பார்கள் அதற்குத்தகுந்த மாதிரி நம்மை நாமே தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

எனக்கு வேண்டப்பட்ட ஒருவர் ஒரு நேர்முகத் தேர்வுக்குப் போய்விட்டு வந்தார். எப்படி இருந்தது இன்டர்வியூ? என்று விசாரித்தேன்: 'நன் போனேன் அவர் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் அவர் எதிர் பார்த்தது மாதிரியே எல்லாப் பதில்களையும் சொன்னேன் கடைசியாக நான் எதிர்பார்க்காத ஒருதகவலை அவர் சொன்னார்' என்றார்; 'என்ன என்று' கேட்டேன். 'அவரும் என்னைப் போல் இன்டர்வியூவிற்கு வந்தவர் தானாம். சும்மா என்னைப் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தாராம்' என்றார்;

தென்கச்சிகோ; சுவாமிநாதன்

## இலங்கையில் முதலிட சீனா மிகுந்த ஆர்வம்

(கொழும்பு)

நாட்டின் சிறியஅளவிலான நீர்மின்சாரத்திட்டங்களில் முதலீடு செய்வதற்கு சீனமுதலீட்டாளர்கள் விருப்பம்தெரிவித்துள்ளனர்.

பசுபிக் பிறிமியர் சக்தி வள நிறுவனத்துடன் சீன நிறுவனம் ஒன்று திட்டமுதலீடு சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் தலைவர் நிமால்பெரேரா இது தொடர்பாககருத்துத்தெரிவிக்கையில், சுமார் 5 கோடி50 இலட்சம் மூலதனத்தை கொண்ட இந்த திட்டத்தில் 88 சதவீதமான பங்கை சீனமுதலீட்டாளர்கள் வழங்கவுள்ளனர்;

ஆனால், இத்திட்டத்திற்கான அங்கீகாரத்தை அரசாங்கம் இதுவரை வழங்கவில்லை என்றார். (உ-8)

### தேசியக் கொள்கைக் குழுவின்

## இனவாதப் போக்கைக் கண்டித்து

## நாளை யாழில் கண்டன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பஸ் நிலையம் முன்பாக நாளை பி.ப.4·30 மணிக்கு கண்டன ஊர்வலத்தை நடத்தஐக்கியசோசலிசக்கட்சி தீர்மானித்துள்ளது.

தேசிய கொள்கைக் குழு என்ற பெயரில்ஜே.வி.பிதலைமையில் தென்னிலங்கையில் உருவாக்கப் பட்டுள்ள சிங்கள பேரினவாதக் கூட்டணி, அரசு -புலிகளிற்கு இடையில் பேச்சுவார்த்தை மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை என்பவற்றிற்குஎதிராகநாளை எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றை தென் பகுதியில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்திலேயே நாளை இக் கண்டன ஊர்வலம்நடத்தப்படவுள்ளது.

இதன் பின் சிங்களப்பேரினவாதக் குழுவினரின் கொடும்பாவிகள் எரிக்கப்படவுள்ளதாகவும்.

இப் போராட்டத்தில் சிங்களப் பேரினவாதத்தை எதிர்க்கும் அனைத்து சக்திகளையும் கலந்து கொள்ளுமாறும் ஐ சோ.கட்சி அழைப்பு விடுத்துள்ளது. (உ-10)

## கைதிகளின் விடுதலை வேண்டி

## கடவுளைப் பிரார்த்தியுங்கள்!

### இந்துசமயப் பேரவை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

நீராகாரம்கூட அருந்தாது உயிரைத் துச்சமெனமதித்து உண்ணாவிரதப் போரில் குதித்துள்ள தென்பகுதிச் சிறைகளில்உள்ள தமிழ் அரசியல்கைதிகள் விடுதலையின் அவசியத்தை வலியுறுத்தி இந்துசமயப் பேரவை அறிக்கைஒன்றினை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது;

களுத்துறைச்சிறையில் நீராகாரம் அருந்தாது உண்ணாவிரதப் போராட்டம்நடாத்தி வரும் கைதிகளின் கோரிக்கைக்கு அரசு மதிப்பளித்து அவர்களை எதுவித நிபந்தனையும்இன்றி உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று பகிரங்கமாகக் கோருகின்றோம்.

இன்றைய சமாதானச் சூழ்நிலையில், சாத்வீகமான போராட்டங்களுக்கு உரிய மதிப்பளிக்கவேண்டிய பெரும் பொறுப்பை உணர்ந்துசெயற்படவேண்டியது காலத்தின் தேவையாகும்.

சிறைக்கூரையில்ஏறி உண்ணாவிரதமிருந்துவரும் கைதிகளின் உடல்நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருவதைஅறிந்து மிகுந்த மனவேதனை அடைகின்றோம். இவர்களுக்கு உயிராபத்து ஏதும் நிகழுமானால் பாரதூரமான பின்விளைவை இந்நாடு எதிர்கொள்ள வேண்டியிருக்கும்என்று அஞ்சுகின்றோம். ஆகையால் உடனடியாக சிறைக்கைதிகளை எதுவித நிபந்தனையுமின்றி விடுதலைசெய்துதவுமாறு மீண்டுமொருமுறை கேட்டுக்கொள்கிறோம்.

உண்ணாவிரதக்கைதிகளின் நலன்வேண்டி சகல ஆலயங்களிலும் பிரார்த்தனைகளை நடத்துமாறு ஆலய தர்மகர்த்தாக்களையும், பூசகர்களையும் கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது. (உ)

## இராசி பலன்

8-10-2002

(புரட்டாதி 22, செவ்வாய்)

துதியை பி.ப 1 02 வரை
சுவாதி மு.இ 10-14 வரை
இராகுகாலம்- 3 02-4 32
நல்ல நேரம் 10.32- 12.02
சித்தம்

**மேடம்**
நல்ல கௌரவம், செய்தொழில் மேன்மை, காரிய சித்தி, வாகன சுகம்.

**இடபம்**
சுவாரஸ்யம், சத்துரு ஜெயம், போசனசுகம், முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
உடல்வியாதி, தாழ்ந்த சுபாவம், வியாபாரநன்மை, காரிய இடையூறு.

**கடகம்**
தாய்வழி உறவு, இலட்சுமிகரம், தன்னம்பிக்கைக் குறைவு பயந்த சுபாவம்.

**சிங்கம்**
கூட்டு முயற்சி, புதிய பொருள்சேர்க்கை, வாக்கு மேன்மை, இனிய அனுபவம்.

**கன்னி**
கௌரவக்குறைவு, தனவிரயம், காரியதாமதம், கற்பனை மிகுதி.

**துலாம்**
பெரியோர் ஆதரவு புதிய சிந்தை, காரியஅனுகூலம், சயன சுகம்.

**விருச்சிகம்**
பிதாசிந்தை, எதிர்பாராத நன்மை, காரிய அலைச்சல், மனச்சஞ்சலம்.

**தனுசு**
நண்பர்கள் சந்திப்பு, மனமகிழ்ச்சி, தொழில் சிந்தை, குடும்பசுகம்.

**மகரம்**
நல்ல செய்தி, அதிக பிரயாசை, கீழ்ப்படிவு, மேன்மை.

**கும்பம்**
உடல்உழைப்பு, வீண்பயம், புதியதிட்டமிடல், காரிய தாமதம்.

**மீனம்**
உடல்வியாதி, மனச்சோர்வு, வாகனபயம், முயற்சி தடங்கல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

### மனித முன்னேற்ற

## ஆசியநிறுவன அதிகாரிகள் விரைவில் இலங்கை விஜயம்

(யாழ்ப்பாணம்)

மனித முன்னேற்ற ஆசிய நிறுவனத்தின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று விரைவில் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது:

குடா நாட்டில், மனித முன்னேற்றம், மனிதர் தம் ஆளுமை, திறன் விருத்தி ஆகியன தொடர்பில் ஆராயவுள்ள இக் குழுவின்நோக்கம், மனிதனைக் கொண்டு மனிதத்தை அபிவிருத்தி செய்வதால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதாகும். (உ-6)

### பண்டத்தரிப்பு தியான இல்லத்தில்

## சமாதான வலுவூட்டல் கருத்தரங்கு 3 நாட்கள்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு மட்டங்களிலும் சமாதான முன்னெடுப்புக்களுக்கு வலுச்சேர்க்கும் விதத்திலான கருத்தரங்கு எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்கள் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் இடம் பெறவுள்ளது.

தென்பகுதி காணாமல் போன படைவீரர்களின் பெற்றோர் சங்கம் இதற்கான ஏற்பாட்டினைச் செய்து வருகிறது.

சமாதானத்துக்கான பிரார்த்தனை மற்றும் சமாதானத்திற்கான பங்களிப்புகள் குறித்து இதில் ஆராயப்படவுள்ளது. (உ-6)

### அஞ்சல்தினக் கட்டுரைப் போட்டி

## அகில இலங்கை ரீதியில் பரு. மாணவன் 2ஆம்இடம்

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் தினத்தை ஒட்டி, அகில இலங்கை ரீதியில்மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆக்கப் போட்டிகளில் கட்டுரைப் போட்டிக்கு கனிஷ்ட பிரிவில் தோற்றிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனான ஆர்.மோகனப்பிரியன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இப் போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் மேற்படி மாணவன் 5 ஆயிரம் ரூபா பணப் பரிசில்களையும் வேறு பரிசில்களையும் பெறவுள்ளார்.

இதேவேளை, இம் மாணவனை பாராட்டிக் கௌரவித்துப் பரிசில் வழங்கும் நிகழ்வொன்று நாளை யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ். சிவராசசிங்கம் தலைமையில்அஞ்சல் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

# வீதிகளில் தோண்டிய குழிகளால் மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

ரெலிக்கொம் நிறுவனத்தினல் யாழ் நகரப் பகுதியில் தொலைத் தொடர்பு விஸ்தரிப்புக்கென தோண்டப்பட்ட குழிகள் மற்றும் அவற்றில் இருந்து வெளியகற்றப்பட்ட கல், மண் குவியல்கள் மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக பொது மக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

மழைகாலமாகையால் மேற்படி குழிகளில் நீர் நிரம்பியுள்ளது. இதனால் வீதிக்கும் குழிக்கும் வித்தியாசம் தெரியாத பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் அதற்குள் தவறி விழும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

தவிரவும் இவ் இடங்களில் சேறும் சகதியுமாக காணப்படுவதனால் அதற்குள் பாதசாரிகள் சிக்குப்பட நேர்வதுடன் விபத்துக்களும் ஏற்பட ஏதுவாகியுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-6)

# ஜப்பானிய தூதுக்குழு நாளை யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் புனரமைப்பு புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து ஆராயும் வகையில் ஜப்பானியத் தூதுக்குழுவினர் நாளை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இவர்கள், நாளை யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் செ பத்மநாதன் தலைமையில் கூடி மேற்படி திட்டங்கள் குறித்து ஆராயவுள்ளனர் (உ-6)

## இலங்கை இராணுவம்

# ஆசிரிய மாணவ, சமூகங்களைத் திட்டமிட்டு அவமானப்படுத்துகிறது

### பல்கலை மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் தினம் என்பது ஆசிரியர்களை கௌரவிக்கும் ஓர் நிகழ்வு இந் நிகழ்வைக் கூட தமது பாடசாலைகளில் சுதந்திரமாக நிகழ்த்த முடியாத நிலையில் இன்று தமிழ் கல்விச் சமூகமுள்ளது சிறிலங்கா இராணுவத்தினரின் கெடுபிடிகள் ஆசிரிய, மாணவ சமூகங்களை திட்டமிட்டு அவமானப் படுத்தும் செயல்களாகவுள்ளன. இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும்; சிறிலங்கா அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு எட்டு மாதங்கள் கடந்துள்ளன.

ஆனால், இன்று வரை சிறிலங்காவின் ஆயுதப்படையினர் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் மீதான அடாவடித்தனங்களைக் குறைக்கவில்லை. இதன் தொடர்ச்சியாக யூனியன் கல்லூரியில் அண்மையில் நடைபெற விருந்த உதைபந்தாட்டப் போட்டிக்கும், ஆசிரியர் தின நிகழ்விற்கும் சிறிலங்கா இராணுவம் தடை விதித்துள்ளது. சிறிலங்கா இராணுவம் இலங்கைத்தீவில் நிலவும் சமாதான சூழ்நிலையை குழப்பும் விதத்தில் மாணவர் சமூகத்தை சீண்டிவருகின்றது இச் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் மாணவர் சமூகம் தமது உரிமைகளுக்காக மேலும் போராடுவது தவிர்க்க முடியாததாகி விடும் என்று குறிப்பிட்டுள்ளது. (உ)

# இரணைதீவுக் கடலிலும் இந்திய மீனவர் ஆதிக்கம்

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்கள் இரணைதீவு மற்றும் பாலைதீவுக் கடற் பரப்பிலும் ஆதிக்கம் செலுத்தி வருவதாக பாதிக்கப்பட்ட மீனவர்களால் வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் முறையிடப்பட்டுள்ளது.

பெருமெடுப்பில் வரும் இந்திய மீனவர்கள் அடாத்தாக மீன்பிடிப்பதோடல்லாமல், இப்பகுதி மீனவர்களின் உபகரணங்களுக்கு நாசம்விளைவித்து வருவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-6)

# மலை நாட்டில் இன்னும் மண் சரிவுகள் ஏற்படலாம்

### புவியியல் பேராசிரியர் எச்சரிக்கை

(கொழும்பு)

மலைநாட்டுப் பிரதேசங்களில் தொடர்ந்து மழை பெய்து வருமானால், மண்சரிவுகள் ஏற்படலாம் என பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறைப் பேராசிரியர் ஒருவர் எதிர்வு கூறியுள்ளார்.

மண்சரிவு ஏற்படப் போவதற்கு அறிகுறியாக அப்பகுதிகளில் வித்தியாசமான ஒலிகள் கேட்க முடியும் என்றும்,

இது தொடர்பாக மலைநாட்டு மக்களுக்கு அறிவுறுத்தல்களும், வழிகாட்டல்களும் நடத்தப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் பலாங்கொடை பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால் 7 பேர் பலியாகியமை தெரிந்ததே.. (உ-8)

# பாலா இலங்கை வருவது பற்றி நோர்வேக்கு எதுவும் தெரியாது

### உறுதிப்படுத்துகிறார் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

இம் மாதம் 31ம் திகதி தாய்லாந்தில் இடம்பெறவுள்ள 2 ஆம் கட்டப் பேச்சுவார்த்தை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் இலங்கைவரவிருப்பது தொடர்பாக தமக்கேதும் தெரியாதென கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரக ஊடகப்பேச்சாளர் ஸ்ரார்லிங்கம் தமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் கொழும்பு விஜயம் குறித்தபல வேறுவிடயம் தொடர்பாக நேரவே தூதரக அதிகாரி ஸ்ரார்லிங்கிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலு தெரிவிக்கையில்; தாய்லாந்தில் இடம் பெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை தொடர்பானவிடயங்கள் பற்றி ஆராய்வதற்கே அன்ரன்பாலசிங்கம் கொழும்பு வருவது உறுதிஎன்றும்ஆனால் அவர் எப்போது எம்மார்க்கமூடாக வருவார் என்பதைத் தெரிவிக்க முடியாதுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ம)

# அமைச்சரின் கார் மோதி இளைஞன் மரணம்

(கொழும்பு)

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவின் காரில் மோதுண்ட இளைஞர்ஒருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டநிலையில் மரணமடைந்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று மாலை 4.30 மணியளவில் அமைச்சர் கண்டியில்இருந்து கொழும்பு திரும்பும்வழியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கம்பகாவைச்சேர்ந்த துமிந்த தீபால் (வயது 22) என்ற இளைஞரே பலியானவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாகஅமைச்சரின் கார்ச்சாரதி கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (உ)

# தாய்லாந்து பேச்சு நிகழ்ச்சி நிரலை முன்கூட்டியே அறிவிக்க வேண்டும்

### பொ.ஐ.மு.பொதுச்செயலர் கோரிக்கை

(கொழும்பு)

தாய்லாந்தில் இம்மாதம்31 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் நிகழ்ச்சி நிரலை முன்கூட்டியே நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று பொதுஜனஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரட்ண அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே நடைபெற்று முடிந்த முதலாவது கட்டப் பேச்சுவார்த்தைகளின் விபரங்களை இதுவரை காலமும் அரசாங்கம் பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு தாய்லாந்தில் நடைபெற்று முடிந்த பேச்சுக்களின் விபரத்தை வெளியிடத் தவறும் பட்சத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு பேச்சுக்களின் விபரங்கள் குறித்து சந்தேகம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும்எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் விபரங்களை வெளியிடுவதன் மூலமே நாட்டுமக்கள் மத்தியில் சமாதானம் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்,

எனவே,முதலாவது கட்டப் பேச்சுவார்த்தைகளின்விபரங்கள் போலன்றி எதிர்வரும் காலங்களில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் விபரங்களை மக்களுக்கு முன் கூட்டியே அறிவிக்க வேண்டும்.

அதுகுறித்து,மக்களின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஈடுபடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின்யாழ். மாவட்டச் செயலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தி வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இம்முறை 'அன்புறு சிந்தையர்' எனும்தலைப்பில் யாழ், பல்கலைக்கழகதமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி அ.சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ)

# உதவி குறித்த மதிப்பீட்டை நடத்த ஜப்பான் நிபுணர் வருவார்

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு, உதவிகள் தேவைப்படும் துறைகள் சம்பந்தமான மதிப்பீட்டையும், ஆய்வையும் நடத்தவென ஜப்பானிய நிபுணர் ஒருவர் அடுத்தமாத ஆரம்பத்தில் கொழும்பு வரவுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஊடகவியலாளர் கழகத்தில் ஆசியல் விவகார அமைச்சர் ஜி எல். பீரிஸை அந்நாட்டு இராஜாங்க அலுவல்கள் அமைச்சர் யசுவோ புக்குடாவைச் சந்தித்த போதே இத்தகவலை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஜப்பானிய உதவித்திட்டத்தின் கீழ். வறிய மக்களின் சமூக அபிவிருத்தி திட்டங்களுக்கு 5 இலட்சம் டொலர்களை மேலும் உதவியாக வழங்கவுள்ளது என்றும்

ஏற்கனவே, விவசாயம் கடற்றொழில், வீடமைப்பு போன்ற துறைகள் சம்பந்தமான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜப்பான் உதவியளித்ததையும் அமைச்சர் புக்குடா சுட்டிக்காட்டியுள்ளார்.

இச் சந்திப்பின் போது,தற்போது நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் மற்றும் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (உ-8)

# மு. கா. சிரேஷ்ட பிரதித் தலைவர்மீது தாக்குதல்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவர்களில் ஒருவரான மஜீட் என்பவர் நேற்று முன் தினம் இரவு கல்முனையில் வைத்து இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டுள்ளார். (உ)

# குடும்பப் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

பனம் பழம் தலையில் விழுந்ததனால் பாதிக்கப்பட்ட குடும்பப்பெண்ணொருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குப்பிளானைச் சேர்ந்த தங்கவேல் ஜெயராணி(வயது30) என்பவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார். (இ)

# உதைபந்தாட்ட ஒன்று கூடல்

(நெல்லியடி)

மாவீரர்களான அல்வின், ஜக்சன், ஆகியோரின் 16 வது வருட நினைவு உதைபந்து ஒன்று கூடல் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை வதிரி டயமன்ஸ் மைதானத்தில் யாழ். ஆசிரிய கலாசாலை மாணவர்களிற்கும் பருத்தித்துறை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி அரசியற் துறைப் பொறுப்பாளர் இ தயா மற்றும் பிரதம பார்வையாளராக மாவீரர்களின் தந்தையர்களான வ. அமிர்தலிங்கம், கா. சிவபுண்ணியம் மற்றும் அ. ரவீந்திர சர்மா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

### யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா

# தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2003ம் கல்வியாண்டிற்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோரில் கூடிய புள்ளிகளைப் பெறுவோர் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படவுள்ளனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் கீழே வருமாறு:

## விஞ்ஞானம்

| | |
|---|---|
| சுகந்தினி விசுவலிங்கம் | கிளிநொச்சி |
| மாயன் விஜிந்தன் | கிளிநொச்சி |
| திரிலோகமூர்த்தி இரமணன் | கிளிநொச்சி |
| அழகன் விஜிதா | ஒட்டிசுட்டான் |
| செல்வராஜா பிரதீபன் | கிளிநொச்சி |
| சிவராஜா தேவராஜா | இளவாலை |
| சிவலிங்கம் பிரதீபன் | யாழ்ப்பாணம் |
| செல்வநாயகம் சிறிதரன் | யாழ்ப்பாணம் |
| பரமேஸ்வரநாதன் ஜசீலா | கோண்டாவில் |
| சிவதர்சினி திருநாவுக்கரசு | சாவகச்சேரி |
| மகாதேவா ராதிகா | யாழ்ப்பாணம் |
| தங்கராஜா கிருஷாந்தி | புலோலி |
| தர்மலிங்கம்அறிவரசி | சுன்னாகம் |
| சிவயாழினி பாலசிங்கம் | ஏழாலை |
| திருநாவுக்கரசு தர்சினி | யாழ்ப்பாணம் |
| அருணாசலம் துர்க்கா | யாழ்ப்பாணம் |
| ராஜலிங்கம் கன்னியகுமரி | சுன்னாகம் |
| கதிர்காமநாதன் இராதிகா | கரவெட்டி |
| லோறன்ஸ் கிளிஸ்ரிநிலானி | ஆனைக்கோட்டை |
| சின்னராசா அனஸ்ரிகா | மானிப்பாய் |
| நடராஜா தர்மினி | அச்சுவேலி |
| சிவகுருநாதன் லிசாந்தி | நல்லூர் |
| ஆரணி சிவஞானச்செல்வம் | வட்டுக்கோட்டை |
| சிவகுமாரன் அபிரா | யாழ்ப்பாணம் |
| அபிராமி கணகநேசன் | சங்கானை |
| சின்னத்துரை சிந்துஜா | உடுப்பிட்டி |
| விஜயரட்ணம் ஜெயகரி | யாழ்ப்பாணம் |
| செல்லத்துரை ஜெனிஸ்ரிலா | சுன்னாகம் |
| கணேசன் அம்பிகாஅபிராமி | பருத்தித்துறை |
| துளசி கந்தசாமி | நீர்வேலி |
| பற்குணராஜா சுபாஜினி | யாழ்ப்பாணம் |
| சுவாமிநாதன் டெனிசியா | கரவெட்டி |
| கந்தையா பிரதீபா | யாழ்ப்பாணம் |
| வல்லிபுரம் தர்சினி | காரைநகர் |
| தனபாலசிங்கம் ஜெயரூபி | நீர்வேலி |
| அரசரட்ணம் ரேணுகா | சுன்னாகம் |
| காதராஜா மேகலா | நீர்வேலி |
| இராஜேந்திரன் மகேந்தி | கொக்குவில் |
| புலேந்திரராஜா அன்ரன்வூல்சின்ட் | பண்டத்தரிப்பு |
| கதிரவேலு அருட்செல்வம் | உடுப்பிட்டி |
| சச்சிதாநந்தம் சிவசங்கர் | இணுவில் |
| சிவசுப்பிரமணியம் சிவகணேசன் | மானிப்பாய் |
| கந்தசாமி எழில்முதல்வன் | வரணி |
| கந்தராஜா கங்காதரன் | எழுதுமட்டுவாழ் |
| இராஜி இரவிராஜ் | சாவகச்சேரி |
| தங்கரட்ணம் ஜெயக்குமார் | நல்லூர் |
| சொர்ணலிங்கம் தேவலிங்கம் | கோண்டாவில் |
| யோகராஜா நந்தரூபன் | வேலணை - 4 |
| பாலசிங்கம் கிசோக்குமார் | யாழ்ப்பாணம் |
| நாகேந்திரம் நயனா | கரணவாய் |
| கந்தையா நிரூபன் | கரவெட்டி |
| தேவருள்ராஜா துளசிதா | கொக்குவில் |
| ரேணுகா கந்தசாமி | அச்சுவேலி |
| சர்மிலா நாகலிங்கம் | கோண்டாவில் |
| கிருஜா மகேந்திரன் | வட்டுக்கோட்டை |
| மனோஜா மனோகரன் | உடுப்பிட்டி |
| கீதா ஜெயராஜசிங்கம் | கோண்டாவில் |
| சிவபாதசுந்தரம் சுபாஜினி | கந்தரோடை |

## கணிதம்

| | |
|---|---|
| மகேந்திரன் ரமணன் | பரந்தன் |
| சுந்தரராஜன் காயத்திரி , | யோகபுரம் |
| மாயன் விஜிந்தன் | கிளிநொச்சி |
| அல்பிரட் யோகராஜா தர்சினி | யாழ்ப்பாணம் |
| செல்வநாயகம் சிறிதரன் | யாழ்ப்பாணம் |
| பரராஜசிங்கம் நவநீதன் | பளை |
| பரமசோதி வாமதேவன் | பருத்தித்துறை |
| சந்திரசேகரம் சசிகரன் | பருத்தித்துறை |
| பாலச்சந்திரன் பிரசன்னா | யாழ்ப்பாணம் |
| தெய்வேந்திரம் சுகந்தன் | கரவெட்டி |
| அமிர்தலிங்கம் அச்சுதன் | வல்வெட்டித்துறை |
| ஜெயவரதராஜா புரஷோத்தமன் | கரவெட்டி |
| செல்வராஜா பிரகாஷ் | கொக்குவில் |
| சிதம்பரப்பிள்ளை விஜயகாந்தன் | மிருசுவில் |
| துரைசிங்கம் சுவேர்தன் | நீர்வேலி |
| துரைராஜா மதனமோகன் | யாழ்ப்பாணம் |
| தியாகராஜா செந்தூரன் | மாதகல் |
| சிவலிங்கம் சுதாகர் | நீர்வேலி |
| இராசபற்குணம் இராகுலன் | வல்வெட்டித்துறை |
| தனபாலசிங்கம் கபிலன் | மீசாலை |
| லசாரூஸ் பிரேமகாந் | சுண்டுக்குளி |
| சிறிபதி சுஜானி | கோண்டாவில் |
| திருநாவுக்கரசு தர்சினி | திருநெல்வேலி |
| வல்லிபுரம் தர்சினி | காரைநகர் |

## கணிதத் தொடர்ச்சி...

| | |
|---|---|
| கணேசன் கயாத்திரி | மானிப்பாய் |
| நல்லதம்பி அருட்செல்வி | இளவாலை |
| சடாச்சரம்முகுந்தா | அச்சுவேலி |
| ஆனந்தசுந்தரம் வதனலட்சுமி | கொழும்புத்துறை |
| செல்வரத்தினம் செல்வரஞ்சினி | நீர்வேலி |
| இராஜேந்திரன் மச்சகாந்தி | கொக்குவில் |
| சிவதாசன் மயூரன் | கோண்டாவில் |
| குகதாசன் விக்னரூபன் | கொக்குவில் |
| டொமினிக் பட்றிக் அன்ரன் | யாழ்ப்பாணம் |
| உபேந்திரன் துஷ்யாந்தன் | சுன்னாகம் |
| இராஜதுரை இராஜவகிந்தன் | சுழிபுரம் |
| நடுநாயகமூர்த்தி இரதீபன் | சுழிபுரம் |
| இலகுபிள்ளை வாகீசன் | கோப்பாய் |
| மகேந்திரன் கோபீஷ் கண்ணா | இணுவில் |
| ஆறுமுகம் வரதராஜன் | பருத்தித்துறை |
| ஏரம்பமூர்த்தி சுதாஸ் | ஏழாலை |
| கதிரமலைநாதன் பாலகுமார் | நல்லூர் |
| ரேணுகா கந்தசாமி | அச்சுவேலி |
| சிவலிங்கம் பிரதாபன் | கோப்பாய் |
| கதிர்காமத்தம்பி வரதசுந்தர் | புலோலி |
| மனோகாரன் வினோதகண்ணா | சுன்னாகம் |
| மார்க்கண்டு தயாநிதி | சாவகச்சேரி |
| சிவபாதம் யசோதினி | மல்லாகம் |
| பரமேஸ்வரநாதன் யசீலா | கோண்டாவில் |
| கணேசமூர்த்தி அனிதா | பருத்தித்துறை |
| இந்திரராசா சர்மிளா | மல்லாகம் |
| நிர்த்திகா சரவணவன் | கொக்குவில் |
| அனஜா கிருஷ்ணதாஸ் | வல்வெட்டித்துறை |
| சபாரத்தினம் சர்மிலா | சுழிபுரம் |
| குலசிங்கம் பிரனாலினி | கோண்டாவில் |
| ரட்ணமாலினி ராஜரட்ணம் | சுழிபுரம் |
| சிவராஜா தேவராஜ் | இளவாலை |
| இலட்சுமணன் அபிராமி | பருத்தித்துறை |
| கலாரஞ்சினி கந்தசாமி | வல்வெட்டித்துறை |
| லோறன்ஸ் கிளிஸ்ரிநிலானி | ஆனைக்கோட்டை |
| சோபனா நாகராசா | கொக்குவில் |
| கீதா ஜெயராஜசிங்கம் | கோண்டாவில் |
| தம்பி லதா | அச்சுவேலி |
| தம்பிப்பிள்ளை சிவராசா | யாழ்ப்பாணம் |

## தொழில்நுட்பவியல்

| | |
|---|---|
| அம்பலவாணர் முரளீதரன் | மல்லாவி |
| இராசரத்தினம் சரவணபவன் | கிளிநொச்சி |
| குலசேரன் ஜெயகரன் | கிளிநொச்சி |
| தில்லைநாயகம் நாகநாதன் | புதுக்குடியிருப்பு- 4 |
| சிவசாமி விநாயகமூர்த்தி | கட்டைக்காடு |
| கருணாநிதி தர்சினி | சுன்னாகம் |
| ராஜரட்ணம் மோகனதாஸ் | இணுவில் |
| பாலசுப்பிரமணியம் காந்தரூபன் | அல்வாய் |
| நித்யானந்தன் நவனீதகுமாரன் | இணுவில் |
| உதயசிங்கம் நித்தியலுகரி | அரியாலை |
| ராஜரட்ணம் சுஜீவன் | மல்லாகம் |
| நிர்மலன் மோகனா | மல்லாகம் |
| கலாரஞ்சினி கந்தசாமி | வல்வெட்டித்துறை |
| தர்மதாசன் தனுஜா | சண்டிலிப்பாய் |
| கார்த்திசேசு காஞ்சனா | அளவெட்டி |
| யோகநாதன் ஜான்சி சுதாமதி | சுன்னாகம் |
| யேசுதாசன் கனிஷ்டயூட்டி | பாண்டிருப்பு |
| ஜீவகலா ராஜதுரை | மானிப்பாய் |
| சின்னத்தம்பி தமயந்தி | சுன்னாகம் |
| வல்லிபுரம் கணேசலிங்கம் | அச்சுவேலி |
| இளையதம்பி கருணா | வல்வெட்டித்துறை |
| கனகலிங்கம் மதிரூபன் | கொக்குவில் |
| செல்வம் தர்மகுமாரன் | கோப்பாய் |
| பரமேஸ்வரன் வரதராஜன் | உரும்பிராய் |
| ரட்ணம் தயாபரன் | கோண்டாவில் |
| பாலசிங்கம் ஜெகபவன் | கொடிகாமம் |
| மார்க்கண்டு சசிரூபன் | அளவெட்டி |
| கார்த்திகேசு கஜேந்திரன் | கச்சாய் |
| கந்தையா சுவாமிநாதன் | புத்தூர் |
| பொன்னன் கஜேந்திரன் | உரும்பிராய் |
| கோபாலகிருஷ்ணன் மதனகோபன் | யாழ்ப்பாணம் |
| ரட்ணராசா ஜெயகரன் | கொக்குவில் |
| ரட்ணம் ஜெகநாதன் | வல்வெட்டித்துறை |
| வீரசிங்கம் யோககலா | கரவெட்டி |
| எட்வேட்அன்ரன் றொபினா தயாளினி | புதுக்குடியிருப்பு |

## மனைப்பொருளியல்

| | |
|---|---|
| ரோகினி வெற்றிவேலாயுதம் | விசுவமடு |
| சிவசிங்கம் வினோரஜனி | உடையார்கட்டு |
| செல்லக்கண்டு அருக்னகொன்சி | சாவகச்சேரி |
| கனகலிங்கம் ஜெகந்தினி | சுன்னாகம் |
| சிவசுப்பிரமணியம் கல்ப்பனா | மானிப்பாய் |
| குருநாதன் தேவகி | சாவகச்சேரி |
| சுந்தரலிங்கம் ரூபாஜினி | கோப்பாய் |
| சின்னப்பு ஜெகந்தா | அளவெட்டி |
| செல்வரட்ணம் சுகந்தினி | திருநெல்வேலி |
| கதிர்காமத்தம்பி அகிலா | கரவெட்டி |
| கந்தசாமி கலைவாணி | பருத்தித்துறை |
| சிவகுருநாதன் சிவவதனி | சாவகச்சேரி |
| உஷாநந்தி பேரானந்தன் | நல்லூர் |
| பவானி இரட்ணசிங்கம் | மானிப்பாய் |

## சமூகக்கல்வி

| | |
|---|---|
| அம்பலவாணர் முரளிதரன் | மல்லாவி |
| பரம்சோதிநாதன் வாமதேவன் | மல்லாகம் |
| நற்குணம் கிரிதரன் | கோண்டாவில் |
| பீதாம்பரம் ஜெகப்பிரியா | வல்வெட்டித்துறை |
| கணேசரட்ணம் ஜெகமாலா | பருத்தித்துறை |
| புலேந்திரராஜா அனித்தா | கோண்டாவில் |
| செல்வரட்ணம் மதியழகன் | அரியாலை |
| மகேந்திரன் சுவேந்திரன் | யாழ்ப்பாணம் |
| ரட்ணசிங்கம் ரணிசன் | யாழ்ப்பாணம் |
| ராமநாதன் ரட்ணராஜா | கோண்டாவில் |
| தர்ப்பரநாதன் சிவரூபன் | நீர்வேலி |
| திருநாவுக்கரசு மதிபரன் | சாவகச்சேரி |
| ஜெயரட்ணம் நிசாகர் | கோப்பாய் |
| துரைசிங்கம் சுசிகரன் | அரியாலை |
| ஜெயநாதன் ஜெயராஜா | கரவெட்டி |
| ஆறுமுகம் வாமதேவன் | அச்சுவேலி |
| ரட்ணராஜா ரஜினி | ஆனைப்பந்தி |
| விவேகானந்தன் சந்திரிகா | அல்வாய் |
| சற்குணசிங்கம் நிசாந்தினி | சுன்னாகம் |
| கணேசன் அனுசா | மானிப்பாய் |
| கெற்சனம் பரிமளா | கரவெட்டி |
| பேரின்பநாதன் தேன்மொழி | கொட்டடி |
| வைரமுத்து பத்மாசினி | தெல்லிப்பழை |
| சிவாநந்தினி குணரத்தினம் | ஆனைக்கோட்டை |
| சரவணபவானந்தன் சங்கீத்தா | வட்டுக்கோட்டை |
| முருகேசு சுதர்சினி | வரணி |
| வேலாயுதம் சிறிமதி | பருத்தித்துறை |
| தாரணி கனகசிவநாயகம் | கோண்டாவில் |
| குமுதினி தியாகலிங்கம் | கிளிநொச்சி |

## சித்திரம்

| | |
|---|---|
| யோதீஸ்வரன் சிவானந்தகுமார் | கிளிநொச்சி |
| பாலச்சந்திரன் ரமாகரன் | கிளிநொச்சி |
| பாலச்சந்திரன் ரமணகரன் | பண்டத்தரிப்பு |
| சின்னத்துரை ஜெகதீபன் | கரவெட்டி |
| அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் | யாழ்ப்பாணம் |
| கார்த்திகேசன் துவாரகன் | மாவிட்டபுரம் |
| வருநாநந்தன் சர்சொரூபன் | கோப்பாய் |
| சிவசோதி சுதர்சினி | சாவகச்சேரி |
| செல்வராசா செல்வரமணன் | புலோலி |
| செல்லத்துரை ஜனந்தன் | சுன்னாகம் |
| மார்க்கண்டு சசிரூபன் | அளவெட்டி |
| ஆரோக்கியதாஸ் செல்வதர்சினி | கரவெட்டி |
| தவராசா கார்த்தீபன் | கொக்குவில் |
| சிவராசா காண்டீபன் | ஏழாலை |
| மேகவனன் சுன்ராஜ் | யாழ்ப்பாணம் |
| இராமச்சந்திரன் ரேணுகா | யாழ்ப்பாணம் |
| கோமகன் யூட்சுதர்சன் | யாழ்ப்பாணம் |
| கணபதிப்பிள்ளை ஜெயந்தன் | அல்வாய் |
| மகாலிங்கம் தவக்குமார் | சாவகச்சேரி |
| வீரகத்தி சித்திரா | ஊர்காவற்றுறை |
| இராஜரட்ணம் சோபா | உரும்பிராய் |
| பற்றிக்அல்பேட் ஜஸ்ஷன் சுதர்சன் | யாழ்ப்பாணம் |
| சுப்பிரமணியம் ரதீஸ்வரன் | தாளையடி |
| கமலசேகரம் டயானா | ஊர்காவற்றுறை |
| ஒலிவர் ஞானராஜா ஜெயதீபா | மானிப்பாய் |

## தமிழ்

| | |
|---|---|
| யசோதா குகதாசன் | வல்வெட்டித்துறை |
| குமுதினி தியாகலிங்கம் | கிளிநொச்சி |
| தியாகராஜா கோமதி | கரவெட்டி |
| வாசுகி தம்பையா | கொக்குவில் |
| சுப்பிரமணியம் சியாமளா | கோப்பாய் |
| ஜெனித்தா குமாரவேலு | புத்தூர் |
| பாலசிங்கம் நிதர்சினி | சுன்னாகம் |
| ராஜரட்ணம் தர்மிளா | சுன்னாகம் |
| வனஜா ராஜரட்ணம் | வேலணை |
| தங்கவேலானந்தன் சரத்பாபு | ஆனைக்கோட்டை |
| நவரட்ணம் சர்மிளா | உருத்திரபுரம் |
| பி.சுதர்சினி | காரைநகர் |
| ரம்யாசெல்வராஜா | இணுவில் |
| அனுசியா இராமநாதன் | அளவெட்டி |
| அருந்ததி சிவபாதசுந்தரம் | யாழ்ப்பாணம் |
| தர்சினி குணராஜா | திருநெல்வேலி |
| நடராஜா தயாநந்தி | சுழிபுரம் |
| ரட்ணம் லீனாட்பேகின் | யாழ்ப்பாணம் |

## சைவசமயம்

| | |
|---|---|
| சுபாஜினி நடராசா | கிளிநொச்சி |
| யுசோதா தர்மலிங்கம் | புதுக்குடியிருப்பு |
| வேல்முருகு சிறிவித்தியா | குருக்கள் மடம் |
| ராஜரட்ணம் சுதாகரன் | கனகராயன் குளம் |
| சுதர்சினி புவனேஸ்வரசுந்தரம் | காரைநகர் |
| தேவராஜா மிருசாயினி | அச்சுவேலி |
| அம்பிகை அருமைநாயகம் | தெல்லிப்பழை |
| தர்சினி சிவராசா | தெல்லிப்பழை |
| வாசுகி தம்பிஜயா | கொக்குவில் |
| ஜெனித்தா குமாரவேலு | புத்தூர் |
| கனகலிங்கம் தயாகோபி | சங்குவேலி |
| நல்லதம்பி நிரஞ்சன் | கரவெட்டி |
| துரைசிங்கம் ரஞ்சித் குமார் | சுன்னாகம் |
| மகேஸ்வரன் சுதாகரன் | சுன்னாகம் |

தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க...

# நவராத்திரி பாமாலை

## (இரண்டாம் நாள்)



## கல்வியைத் தொடர்வோம்

மூன்றுநாள் துர்க்கையை தொழுவோம்
மூன்றுநாள் இலக்குமியைத் தொழுவோம்
மூன்றுநாள் நாமகளைத் தொழுவோம்
ஊன்றிக்கல்வியை பத்தில் தொடர்வோம்

ஏ. யோகினி
அத்தியார் இந்துக் கல்லூரி;

## நவசக்தி நாயகியே

நவதினங்கள் தவமியற்றி நாமிங்கு வணங்கிடவே
உவகையைத் தருபவளே உலகைக் காப்பவளே
அவதூறு ஒன்றும் அணுகிடாது இருக்கவே
நவசக்தி நாயகியே நல்லிதயமுடன் அருள்வாயே!

த. அஜந்தகுமார்
நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

## வணங்கினேன்

அன்னையே துர்க்கையே
பொன்னையே ஒத்தனை
உன்னையே வணங்கினேன்
என்னையே ஆட்கொள்வாய்

ஸ்ரீ. சஜலக்ஷி
உரும்பிராய் தெற்கு

## பொற்காலம் நிலைக்க..

வீரத்தை தந்திடுவாய் துர்க்கையே
வீரர்கள் ஆக்கிடுவாய் துர்க்கையே
பாலர்நாம் வருந்துகின்றோம் துர்க்கையே
பாலரெம்மை காத்திடம்மா துர்க்கையே

எத்தனை துன்பமம்மா துர்க்கையே
அத்தனையும் போக்கிடுவாய் துர்க்கையே
போரதை நீக்கிடுவாய் துர்க்கையே
பொற்காலம் நிலைக்கவை துர்க்கையே

கா. பாலேஸ்குமார்
டிறிபேக் கல்லூரி
சாவகச்சேரி.

## அன்னையே காத்தருள்வாய்

சிம்மவாகனம் மீதிருந்து வீரம்தனை நல்கி
செந்தாமரை மீதிருந்து செல்வம் பல நல்கி
வெண்தாமரை மீதிருந்து வீணாகானம் இசைத்து
அஞ்சேலென அருளும் அபயகரம் அதனுடன்
சக்தி நவசக்தி, திரிசக்தி திருவடியை
நித்தியமாய் நாம் தொழுவோம்
அன்னையே காத்தருள்வாய் !

கார்த்திகா பாலசுப்பிரமணியம்
வேம்படி மகளிர் கல்லூரி.

# வன்னியில் பெரும் எழுச் சியுடன் மாலதியின் நினைவுநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் வீரகாவியமான முதல்பெண் போராளி 2ம்லெப்டினன்ட்மாலதியின் நினைவு நாளும் தமிழீழ பெண்கள் எழுச்சிதினமும் எதிர்வரும் 10ந்திகதிவன்னிப் பெருநிலப்பரப்பில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மகளிர்படையணியின் இராணுவஅணி வகுப்புக்கள் மகளிர் படையணியின் போராட்டவரலாற்றைச் சித்திரிக்கும் ஊர்திகள் பவனி, உயிர்க்கவிதையின் உயர்வேதம்என்னும் நாடக அரங்கம் உண்மைச்சம்பவங்களைத் தாங்கிய உயிரை உருக்கும் கலைநிகழ்வுகள் விசேடபடையணியின் வீரதீரச் செயல்கள், தமிழீழ இசைக்குழுவினரின்இன்னிசை மன்னகுளச்சமரின் மாதிரி வடிவ நிகழ்வு ஆகியன உட்பட இன்னும்பல கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன

இதேவேளை வன்னிப் பெருநிலப்பரப்பில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் குடாநாட்டுமக்கள் கலந்து கொள்ளுவதற்கான விரிவான ஏற்பாடுகள் ஏற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் குடாநாட்டிலிருந்து வன்னிக்குச் செல்வதற்கான இலவச பேருந்து சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

தமிழீழப் பெண்கள்எழுச்சி தினமான அன்றையதினம் குடாநாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மேற்படி நிகழ்வில்பேரெழுச்சியுடன் கலந்து கொள்வரென எதிர்பார்க்கப்படுகிறது.

(த-246)

# உலக இந்து மாநாடு சிறப்புற நடாத்த 9 குழுக்கள் தெரிவு

(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள இந்து மாநாடு தொடர்பாக அமைச்சர் மகேஸ்வரன் தலைமையில் 9 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் தலைவர் மற்றும் செயலாளர் விபரங்கள் வருமாறு:-

வழிகாட்டற்குழு- (தலைவர்) அமைச்சர் தி மகேஸ்வரன் (செயலாளர்) க. பரமேஸ்வரன்.

ஒழுங்கமைப்புக்குழு-(தலைவர்) க.நீலகண்டன் (செயலாளர்)-என்.மன்மதராஜன்

கல்விசார்குழு-(தலைவர்)- பேராசிரியர் சி.பத்மநாதன் (செயலாளர்)- வே.குமார் வடிவேல்.

மலர்க்குழு-(தலைவர்)-இரகுபரன் (செயலாளர்)- எஸ். தெய்வநாயகம்.

நிதிக்குழு- (தலைவர்)- டி.எம்.சுவாமிநாதன்.

பிரசாரக்குழு- (தலைவர்)- செல்வி சற்சொருபவதிநாதன் (செயலாளர்)- ம.சண்முகநாதன்.

கலாசாரக்குழு-(தலைவர்)- திருமதியமுனா கணேசலிங்கம் (செயலாளர்)- கே.ராஜபுவனேஸ்வரன்.

உபசாரக்குழு- (தலைவர்)- சி.தனபாலா

போக்குவரத்துக்குழு- (தலைவர்)- நிமலன் காத்திகேயன்.

நான்கு நாட்கள் நடைபெறவுள்ள இம் மாநாட்டின் ஆரம்ப வைபவம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மே 2 ஆம் திகதி காலை நடைபெறும்.

ஆராய்ச்சிக்கருத்தரங்குகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அடுத்த மூன்று நாட்களும் நடைபெறுவதுடன் கலை நிகழ்ச்சிகள் நான்கு நாட்களும் மாலை வேளைகளில் நான்கு வேறு அரங்குகளில் நடைபெறவுள்ளன.

உள்ளூர்க் கலைஞர்களும் வெளிநாட்டு கலைஞர்களும் இவற்றிலே பங்குகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணவர் அரங்கம் இரத்மலானை இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மாவட்டரீதியாகவும்தேசிய மட்டத்திலும் பண்ணிசைப் போட்டி, கட்டுரைப்போட்டி பேச்சுப்போட்டி என்பன நடத்தப்பட்டு வெற்றி பெறுபவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. (உ)

# 19-வது திருத்த சட்டமூல தீர்ப்பு இன்று அறிவிப்பு

(கொழும்பு)

19 வது திருத்தச் சட்டமூலம் குறித்தான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினைஇன்று ஆரமபமாகும பாராளுமன்ற அமர்வுகளின் போது சபாநாயகர் உத்தியோக பூர்வமாக அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

19 வது திருத்தசட்ட மூலம் மீதான மனுக்களின் விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ள துடன், தீர்ப்பு ஜனாதிபதிக்கும, சபாநாயகருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம் மனுக்கள் மீதான உயர் நீதிமன்றத் தீர்ப்பை மக்கள் மட்டும்மன்றி அரசியல் தலைவர்களும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசியலமைப்பிற்கு இத் திருத்தச் சட்ட மூலம் எவ்வாறு அமையும் என்பதைப் பொறுத்தே அரசாங்கத்தின் ஆதரவு திரட்டும் அடுத்த சட்ட நடவடிக்கைகள் தொடரும் என தெரியவருகிறது.

இத் திருத்தச்சட்ட மூலத்திற்கு ஆதரவுவழங்க 20 க்கும் மேற்பட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் தயாராக உள்ளனர்என்று ஆளுங்கட்சி கூறியுள்ளது.

அதேவேளை, அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற 19 உறுப்பினர்களின் ஆதரவு தேவைஎன்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

# மனித உரிமை ஆணைக் குழுவில் நிதி நெருக்கடி

(மானிபபாய்)

மனித உரிமைகள் ஆணைக் குழு நிதிப்பற்றாக்குறை காரணமாக பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆணைக்குழுவின் செலவினங்களுக்கென இந்த ஆண்டு3கோடி ரூபாதேவைப்படுகிற போதிலும் அரசு 2 கோடி 50இலட்சம்மட்டுமே ஒதுக்கி உள்ளது.

நிதிப்பற்றாக்குறைதொடர்பாக திறைசேரி அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் மனித உரிமைகள் ஆணைக் குழு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(த-232)

# சிறந்த கிராமப் போட்டி விநாயக புரம் 2 ஆம் இடம்

(வவுனியா)

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான சிறந்த கிராமங்களைத் தெரிவு செய்யும் போட்டியில் வவுனியா விநாயகபுரம் கிராமம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெற்ற கிராமங்களுக்கான பரிசில்கள் நேற்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

(உ- 10)

# சுவிஸ்ற் ரெறிகஸ் கொன்ஸ் நிறுவனம் மட்டக்களப்பு பகுதியில் தாய் சேய் நலத்திட்டம்

(மட்டக்களப்பு)

சுவிஸ்ற் ரெறிகஸ் கொன்ஸ் நிறுவனம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தாய் சேய் நலத்திட்டத்தை செயற்படுத்தி வருகிறது.

இந் நிறுவனம் கர்ப்பிணித் தாய்மார் பாலூட்டும் தாய்மார் 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் நலன் சார்ந்ததாக 14 கிராமங்களில் இதனை செயல்படுத்திவருகிறது.

இத்திட்டத்தில் அடங்கும் 10 கிராமங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

# இரவு வேளைகளில் விறகுகொண்டுசெல்ல தடை

(காரைநகர்)

காரைநகர்ப்பகுதியில் இருந்து இரவு வேளைகளில் பொன்னாலை ஊடாக விறகு கொண்டுசெல்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரவு வேளையில் விறகு கொண்டுசெல்வோர் பச்சை மரங்களையும் விறகுகளாக எடுத்துச் செல்வதாக காரைநகர் சூழல் பாதுகாப்புச் சங்கத்திற்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து இவ்வாறு இரவு வேளையில் விறகு எடுத்துச் செல்வதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையையும் மீறி விறகு கொண்டுசெல்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-246

சுற்றத்தால் சுற்றப் பட
ஒழுகல் செல்வந்தான்.
பெற்றத்தால் பெற்ற பயன்.

குறள்

வலம்புரி

## சர்வதேசத்தின் அவசரம்

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டதை யடுத்து, ஏதோ இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு விட்டதாக சர்வதேச நாடுகள் எண்ணிக்கொண்டு தத்தம் நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பியனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

ஈழத் தமிழர்கள் தம் நாட்டில் நிம்மதியாகச் சுதந்திரமாக நடமாட முடியாதென்ற கட்டத்திலேயே வெளிநாடுகளுக்குச் சென்று அரசியல் தஞ்சம் கோரினர். உயிருக்கு உத்தரவாதம் இல்லாத போது தமது மண்ணை விட்டு வெளியேறியவர்களைப் பாதுகாக்கின்ற கடமை சர்வதேசத்திற்கு உண்டு.

ஆனால் ஈழத் தமிழர்களின் அவல நிலையை-கடந்த இருபது வருட காலமாக இடம்பெற்ற யுத்தத்தின் கொடூரத்தை உணராதவர்களாக சர்வதேசத்தினர் நடந்து கொண்டனர். குறிப்பாக சர்வதேச நாடுகள் பல ஈழத் தமிழர்களை குடி அகலும் உழைப்பாளர்கள் என்று கருதியதே ஒழிய அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை உணரத் தவறின. இதனால் தமது உதவிக்கரத்தை நீட்டுவதில் பின்னடிப்பும் ஏற்பட்டது.

இவையெல்லாம் கசப்பான சம்பவங்களாக இருப்பினும் தற்போது அரசும், விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதனால் இப்போது அங்கு பிரச்சினைகள் இல்லையெனச் சர்வதேச நாடுகள் கருதுவதோடு, அவ்வாறு கருதியதன் விளைவாக ஈழத் தமிழர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையில்ஈடுபட்டுள்ளன.இவையெல்லாம் சர்வதேசத்தின் பொறுப்பற்ற செயலென்று கருதவேண்டியுள்ளது.

இன்னமும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத போது அகதி அந்தஸ்துக் கோரித் தஞ்சம் புகுந்தவர்களை நாடு கடத்துவது இவை மனித உரிமைகளைக் காக்கும் செயலன்று.

மாறாகப் பாதிக்கப்பட்ட ஓர் இனத்தின்பால் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வாகவே கருதப்படும்.

# வைரஸ் கண்நோய் ஒரு கிழமையில் குணமாகும்

# கருவிழியில் வெள்ளைப் புள்ளிகள் ஆபத்தானவை

**மருத்துவ விளக்கம்**

**டாக்டர் எம். கே. முருகானந்தன்**

ஒன்று மாறி ஒன்றில் இரண்டு கண்களிலும் கண்நோய் வந்து சிரமப்படுத்துவதுண்டு. வேலைக்குச் செல்ல முடியாது. படிப்பைக் கெடுத்து விடுகிறது. இக்கண்நோய் வராமல் தடுக்க முடியாதா? என்ற கேள்வி எழுவதுண்டு. ஏன் தடுக்க முடியாது? முழுமையாகச் சுகாதார முறைகளைக் கடைப்பிடித்தால் நிச்சயம் தடுக்கலாம். அதற்கு முன் கண்நோய் பற்றிச் சிறிது விபரமாக அறிந்து கொண்டால் அது வராமல் தடுப்பது சுலபமாகும்.

அடிக்கடி பரவிவரும் கண் நோய் Onjumtivities எனப் படுவதாகும். இது விழியின் வெண்விழிப்படலத்தையே தாக்குவதால் வெண்விழி அழற்சி எனத் தமிழில் கூறலாம். வெண்விழி அழற்சி எனப்படும் இக்கண்நோய் வைரஸ் கிருமிகளால் ,அல்லது பக்டீரியாக் கிருமிகளால் ஏற்படுகின்றன. சிலவேளைகளில் ஒவ்வாமை என்று சொல்லப்படும் அழற்சியாலும் வரலாம்.

### வைரஸ் கிருமி

இக்கண்நோய் காலத்திற்குக் காலம் இலங்கை பூராவுமே மிக வேகமாகப் பரவி வருவதுண்டு: இது வைரஸ் கிருமியினால் , பரவி வருகின்றது. வைரஸ் கிருமியால் ஏற்படும்இந்நோயில்கண்ணில் இருந்து வடியும் திரவம், நீர் போன்ற தன்மையைக் கொண்டிருக்கும். ஆனால் பக்டீரியாக் கிருமியினால் ஏற்பட்டால் கண்ணிலிருந்து சுரக்கும் திரவம் தடிப்பான சீழ் போன்ற பீளையாக வடியும். ஒவ்வாமையால் படும் கண்நோயில் தடிப்பான எச்சில் போன்ற திரவம் வடியும்.

இடையிடையே வேகமாகப் பரவி வரும் கண்நோய் வைரஸ் கிருமிகளால் வருகிறது என்பதால் அவற்றிற்கு மருந்து எதுவும் கிடையாது. என்றாலும் நோயுற்று இருக்கும் கண்ணில் பக்டீரியா கிருமிகளும் சுலபமாகத் தொற்றிவிடும் வாய்ப்பு இருப்பதால், அதனைத் தடுப்பதற்காககுளோரம்பெனிக்கல் (Chloremphenicol) போன்ற நுண்ணுயிர் கொல்லி போன்ற கண் களிப்பு மருந்துகளை வைத்தியர்கள் சிபார்சு செய்கின்றார்கள். பாடசாலைகள், பாடசாலை விடுதிகள் சிறைச்சாலை, தடுப்பு முகாம்கள், ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவு, மக்கள் நெருக்கமாகப் பிரயாணம் செய்யும் பஸ்கள் போன்ற இடங்களில் இந்நோய் வேகமாகத் தொற்றுகிறது.

### அறிகுறிகள்

ஆரம்பத்தில்கண்ணின்மேல் மடலின் கீழ் ஏதோ உறுத்துவது போன்றஉணர்வுஏற்படும் பின் கண்ணிலிருந்து கடுமையாக நீர்வடிய ஆரம்பிக்கும். காலையில் கண்விழிக்கும் பொழுது கண் இமைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருக்கும். கண்கள்கடுமையாகச் சிவப்பதுடன்இமைகளும் வீங்கியிருக்கும். அத்துடன் காதுக்குமுன் சிறிய நிணநீர்க்கட்டி (நெறி) நோயுடன் தெரியவரும். பெரும்பாலானவர்களுக்கு நூற்றில் ஐம்பது பேருக்கு இரண்டாவது கண்ணிற்கும் நோய் பரவி விடும்.

கண்நோய்விரைவாகப்பரவுதற்குக் காரணம் என்ன வென்றால், நோய்க்கிருமிகள் நோயாளியின் கண்விழிகளில் மாத்திரமன்றி நாசியிலும், தொண்டையிலும் கூடக் காணப்படுவதுதான். இதனால் கண்நோய் நோயாளியிடமிருந்து நேரடியாகத் தொற்றுவது மாத்திரமின்றி, நோயாளி தும்மும் போதும், இருமும் போதும்கூடமற்றவர்களுககுத் தொற்றலாம்.

### தடுப்பது எப்படி

கடைசியாக இந்நோய் தொற்றுவதைத் தடுப்பது எப்படி எனப் பார்ப்போம்.

1) நோயுற்றவர்களிடம் நெருங்கிப் பழகாதிருத்தல்.

2) நோயுற்றவர் பிரயாணம் செய்யும், பஸ்களிலும், கார்களிலும் பிரயாணம் செய்வதைத் தவிருங்கள். முக்கியமாகக் காற்றோட்டம் அற்ற குளிரூட்டிய வாகனங்களில் நோய் வந்தவருடன் பிரயாணம் செய்தால் நோய் பரவுவதற்கான வாய்ப்பு மிக அதிகமாகும்.

3) வீட்டில் யாருக்காவது கண்நோய் வந்து விட்டால் அவரைத் தனிமைப் படுத்தி வையுங்கள்.

4) நோயுற்றவர் உபயோகித்த துவாய், கைக்குட்டை, தலையணை போன்றவற்றை மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது.

5) கண்நோய் வந்தவர் தும்மும் போதும், இருமும் போதும் கைக்குட்டையால் வாயையும், மூக்கையும் மூடிக் கொள்ள வேண்டும்.

6) நோயுற்றவர் அடிக்கடி தனது முகத்தைஇளஞ்சூடான நீரினால் கழுவ வேண்டும். கைகளையும் அடிக்கடி கழுவுவதுடன், உபயோகித்த கைக்குட்டை துணிகளையும் சவர்க்காரம் போட்டுத் துவைக்க வேண்டும்.

7) கண்நோய் வந்தவர்பாடசாலைக்கோ, வேலைத் தலத்திற்கோ போகாமல் வீட்டில் தங்கியிருப்பது நல்லது.

பொதுவாகக் கண்நோய் ஒருவாரமளவில் குணமாகிவிடும். ஆனால் வெளிச்சத்தைப் பார்க்கக் கடும் கூச்சம் இருந்தால், அல்லது கண்கருவிழியில் வெள்ளை நிறப் புள்ளிகள்தென்பட்டால் உடனடியாகக்கண்வைத்தியரை அணுகுங்கள்.

# எதிர்க்கட்சிக்குள் உட்பூசல் உச்சம்

(கொழும்பு)

கட்சிக்குள் மேலாதிக்கம் பெற முயற்சிப் பவர்களால் எதிர்க்கட்சிக்குள் பூசல்கள் அதிகரித்துள்ளதாக அவ் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இந் நிலையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிரான செயற்பாடுகள் சூடுபிடித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இம்மாதம் முதலாம் திகதி சகல எம்.பி.க்களுக்கும் கடிதம் எழுதி ஒக்டோபர் 7 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 4 00 மணிக்கு பாராளுமன்றத்தின் இரண்டாம் இலக்க அறையில் கூடுமாறு கோரியிருந்தார். எதிர்க்கட்சியின் பிரதம கொரடா என்றவகையில் மங்கள சமரவீர எம். பி அதனில் ஒப்பமிடவில்லை.

ஆனால், அதற்கு மறுதினம் மங்களசமரவீர எம். பி. சகல எம்.பி.க்களுக்கும்தந்திஅனுப்பியிருந்தார். ஒக்டோபர் 7 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5. 30 மணிக்கு எல்லோரும் ஜனாதிபதிமாளிகைக்கு சமுகமளிக்குமாறு அவர் அதில் கேட்டிருந்தார்.

ஜனாதிபதி தலைமையில் கூட்டம் நடைபெறும் என்று அறிவித்துள்ள அவர்,பாராளுமன்ற அறையில்கூட்டம்நடைபெறுவதாக அறிவித்தகடிதம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

(உ)

# அ. இ. த. கா. செயற்குழு ஞாயிறன்று கூடியது

(துன்னாலை)

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக ஆராயும் அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம கட்சித்தலைவர் அ. விநாயகமூர்த்தி தலைமையில் வடமராட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் செயற்குழு உறுப்பினருமான ஜி ஜி. கஜேந்திரகுமார் மற்றும் கட்சிஉறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கை மின்சாரசபையின் யாழ். மாவட்டக்கிளையில் பயிற்றப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கல், மீனவர்களின் பாஸ் நடைமுறையை நீக்குதல், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துச்சேவைகளில் காணப்படும் குறைபாடுகளைப்போக்க நடவடிக்கை எடுத்தல், படையினரால் மூடப்பட்ட வீதிகளை மீண்டும் மக்கள்பாவனைக்கு விடுதல், பொதுமக்களின் வீடுகளில்உள்ள படையினரை வெளியேற்றல் ஆகியன தொடர்பில் இதில் ஆராயப் பட்டதுடன்,

இதுவிடயத்தில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

(உ-4)

# குருநகர் காவலரண்கள் பலப்படுத்தப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

குருநகர்கடற்கரையைஅண்டிய பகுதியில் உள்ள படையினரின் காவலரண்கள் பலப் படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே உள்ள காவலரண்களை மழைக்கு ஏற்ற வகையில் மீளமைப்புச் செய்வதிலும் படையினர் ஈடுபடுகின்றனர்.

இதே வேளை, படையினரின் இப் பலப்படுத்தல் நடவடிக்கை காரணமாக மீன்பிடி வள்ளங்களை கடற்கரையில் இறக்கி தொழில் செய்ய முடியாதிருப்பதாகவும் மீனவர்களால் குறை கூறப்படுகிறது.

(உ-6)

# சமாதானக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கியூடெக் சமாதானக் குழுவின் ஏற்பாட்டில் சமாதானம தொடர்பான முழு நாள் கருத்தரங்கொன்று எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை இளவாலை சென் ஜேம்ஸ் ஆலயப் பங்கில் இடம்பெறவுள்ளது.

இவ்வாறானதோர் கருத்தரங்கு மறுநாள் நவாலி புலவர் முகாமிலும்நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(உ-6)

## தினசரி தியானம்



## ஒழுக்கமே ஆற்றல்

ஒரு மனிதனின் ஒழுக்கமே அவனை வாழவைக்கிறது. ஸ்ரீ ஆதிசங்கரர், புத்தபகவான், ஏசுநாதர் மற்றும் பழங்கால முனிவர்களை எல்லாம் அவர்களது வியக்கத்தக்க ஒழுக்கங்கள் காரணமாகவே இன்றும் நினைவு கூர்கிறோம். ஒருவருக்கு உண்மையான ஆர்வத்தையும், சக்தியையும் தருவது ஒழுக்கமே, இன்னும் மேலாகச் சொல்லவேண்டுமானால், ஒழுக்கம் இல்லாதவர் நடைப்பிணமே, எனவே, பக்தர்கள் நல்ல ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கவேண்டும்.


சுவாமி சிவானந்தர்







கடற்கரையிலிருந்து திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணியச் செல்லும் பெண் போராளிகளை முதலாவது படத்திலும், நினைவுச் சுடர் ஏந்திச் செல்லும் போராளிகளை இரண்டாவது படத்திலும், குமரப்பா புலேந்திரன் நினைவு தினத்தையொட்டி பொது மக்களால் கடற்கரையில் நிகழ்த்தப்பட்ட கலை நிகழ்வுகளில் ஓர் காட்சியை மூன்றாவது படத்திலும் காணலாம். (வே.தவச்செல்வன்)



அமெரிக்காவின் ஈராக்கிற்கு எதிரான தாக்குதலைக் கண்டித்து நேற்று ஜே.வி.பி.யினர் கொள்ளுபபிட்டியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருப்பதையும், பொலிஸார் அவ் ஆர்ப்பாட்டத்தை அடக்குவதையும் படங்களில் காணலாம்.

## விடுதலை...

நிபந்தனையும் இன்றி உடன் விடுதலை செய்ய வேண்டும்.

இன்று நாம் 5ம் கட்டமாக ஒக்டோபர் மாதம் 1ம் திகதி முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுளளோம். இது எமது விடுதலை அல்லது சாவு வரை தொடரும் என்பதை மிகவும் தயவுடன் தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

தாங்கள் திட்டமிட்டுள்ள சமாதான அபிவிருத்தி மன்ற செயற்திட்டங்கள் வெற்றி பெற நாம் வாழ்த்துவதுடன் பிரார்த்திக்கின்றோம். அரசு எம்மை மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கத் தவறினால் நாம் சிறைக்கம்பிக்குள் தியாகச் சாவைச் சந்திப்போம்.

எமது சாவு சமாதானத்திற்குக் குந்தகத்தை ஏற்படுத்தக் கூடாது. எனவே இவ் உண்ணாவிரதப் போராட்டத்தினால் நாம் சாவை சந்தித்தால் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சிய்ய கைவிடாது தொடர வேண்டும்.

இந் நாட்டின் அனைத்துப் பிரஜைகளினதும் நன்மை கருதி சமாதான முயற்சியினை இரு தரதப்பும் தொடர வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

நாம் சமாதான முயற்சியைக் குழப்புவதற்கு முயலவில்லை. சமாதானத்திற்காகவே போராடுகிறோம்

மனிதாபிமான அடிப்படையில் எம்மை விடுதலை செய்யுங்கள். எதிர் வரும் தீபாவளித் திருநாளில் எமது உறவுகளுடன் திபாவளித்திருநாளை கொண்டாட உதவுங்கள் என்றும்,

களுத்துறை கைதிகள் எழுதிய அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## அரசு...

பிணைமனுத் தாக்கல் செய்திருப்பதாகவும், அவர்கள் பிணையில் விடுவிக்கபடும் பட்சத்தில் புலிகளினால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள 6 இராணுவத்தினரையும் விடுதலைப் புலிகள் விடுவிப்பார்கள் என்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் நம்பிக்கை தெரிவித்தார்.

(ம)

---

## அமைச்சர்...

சிங்கம் எம்.பியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் உண்ணாவிரதிகள் தொடர்பாக பேசியதை அடுத்து நடவடிக்கை எடுப்பதாகப் பிரதமர் ரணில் அவரிடமும் உறுதியளித்துள்ளார்.

(ம)

---


# அழைப்பிதழ்

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின்
இந்துசமய காலாசார அலுவல்கள் திணைக்களம்
நடத்தும்

## இந்துசமயப் பேருரை இல - 121

சொற்பொழிவாளர் :- ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி பிரம்மஞானி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் அவர்கள்
பொருள் :- "மேன்மை கொள் சைவநீதி"
தலைமை :- திரு.பரமேஸ்வரன் அவர்கள் செயலாளர் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு
இடம் :- இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபம் கொழும்பு - 06
காலம் :- 12.10.2002 சனிக்கிழமை மாலை 5.00 மணி
நன்றியுரை :- திரு.வி.குமாரவடிவேல் உதவிப் பணிப்பாளர் (இந்து விவகாரம்) இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

இச்சமயப் பேருரை நிகழ்ச்சியில் கலந்து பயன்பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்தி திருநாவுக்கரசன்
பணிப்பாளர்
இந்துசமய காலாசார அலுவல்கள் திணைக்களம்

இல 248 1/1 காலி வீதி
கொழும்பு



# தற்காலிக இடை நிறுத்தம்

எமது சங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட மணல் விநியோகம் இன்றும் நாளையும் (8ம், 9ம்) திகதிகளுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல்
பாதுகாப்புச் சங்கம்
குடத்தனை

[C/5114]



# பாராட்டி வாழ்த்துகிறோம்

ஹாட்லியின் புகழ் பூத்த
மைந்தன

## திரு.T.E.ஆனந்தராஜா

பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டதை பெரு மகிழ்வுடனும் பேருவகையுடனும் பாராட்டுவதுடன் அவர் தம் கடமையை செவ்வனே செய்து பார் போற்றிட வேண்டி நிற்கின்றோம்.

ஹாட்லிக் கல்லூரியின் பழைய
மாணவர் மன்றமும்,
கிளைகளும்.

[C/5113]



சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
சுத்தமானநல்லெண்ணெய்

# V.S.P லஞ் ஓயில்

தயாரிப்பாளர்

## பிரியா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.



# எரிபொருள் சிக்கனம் காட்டு வளம் காக்கும்.



அன்பார்ந்த மாணவர்களே!
உங்கள் வலம்புரியில்
விரைவில்
எதிர்பாருங்கள்
க.பொ.த. (சா/த)
மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்கள்
யாழ் முன்னணி
ஆசிரியர்களின்
தாயாரிப்பில்



2ம் லெப். மாலதி நினைவு நாள்

## தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் 10.10.2002

2ம் லெப். மாலதி நினைவு நாளான, தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுகள் வன்னிப் பெருநிலப்பரப்பு திறந்த வெளியரங்கில் நடைபெறக் காத்திருக்கின்றது...

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகள் ஒருங்கிணைந்து நடாத்தும்

# மாபெரும் எழுச்சி நிகழ்வு



வீழ்ந்தது விதை
எழுந்தது பயிர்
கடந்தது நெருப்பு
உயர்ந்தது கரம்.

- மகளிர் படையணியின் இராணுவ அணிவகுப்புகள்
- மகளிர் படையணியின் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் ஊர்திகள் பவனி
- உயிர்க் கவிதையின் உயர் வேதம்... (நாடகம்)
- உண்மைச் சம்பவங்களைத் தாங்கிய உயிரை உருக்கிடும் கலை நிகழ்வுகள்
- விசேட படையணியின் வீர தீரச் செயல்கள்
- தமிழீழ இசைக்குழுவின்இசைவார்ப்புகள்
- அமெரிக்காவின் 'கிறீன் பரே' அணியினரிடம் பயிற்சிகள் பெற்ற சிறலங்காவின் One Commondo, Two Commondo விசேட அணிகள் மகளிர் படையணியின் புதிய போர்த் தந்திரோபாய யுத்தியினால முறியடிககப்பட்ட மன்னகுளச் சமரின் மாதிரி வடிவ நிகழ்வு.
- இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறக் காத்திருக்கின்றன. . . .

பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும்... கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும்...
நேற்று எழுந்த எரிமலையை அணைத்தவர்கள். இன்று சமாதானப் பாதைக்கு வழி அமைத்தவர்கள்.
இந்த அக்கினிப்புக்களா...! நீங்களே வியந்து நிற்க. உங்கள பிள்ளைகள் வெற்றியோடு உங்களை நோக்கி...
................................ காணத் தவறாதீர்கள் ................................

மாலதி படையணியின் உருவாக்கத்தில்....
களத்தில் நிற்கும் போராளிகளின் குரலாக வெளிவருகின்றது...

## வெஞ்சமரின் வரிகள்

பாடல் ஒலிப்பேழை

அன்பரசி படையணி, திலகா படையணி உட்பட ஆயிரக்கணக்கான பெண் போராளிகள் பங்குகொண்டு நடாத்தும் மாபெரும் எழுச்சி நிகழ்வினைக் கண்டு மகிழ அனைத்து மக்களையும் வருக... வருக... என அன்போடு அழைக்கின்றோம்.



காலம் - 10.10.2002
நேரம் - மாலை 3.00 மணி (தமிழீழ நேரப்படி)
இடம் - கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடல்

நன்றி
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

மகளிர் படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.